
விலை ரூபா: 8.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு
சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 25 வியாழக்கிழமை (07.04.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 109




# தீவுச்சேனையில் கருணா முகாம்

# யுத்த நிறுத்தத்தை மீறும் செயல்

## ஜனாதிபதி ஆணைக்குழு முன் கண்காணிப்புக் குழு

(மட்டக்களப்பு)

இராணுவ கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பொலநறுவை வெலிக்கந்தை பிரதேசத்தில் கருணா குழுவின் முகாமொன்று இருப்பதாக இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட தலைமைப் பிரதிநிதி பி.ஆர்.ஸ்டீன் கூறியுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் கான்ஸ்டபிள் நேற்று சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

கல்முனைக்குடி நகர மண்டபத்தில் அமைந்துள்ள நலன்புரி நிலையத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நேற்றுக் காலை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று (12 ஆம் பக்கம் பார்க்க)

## சா/த பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியாகின

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று நண்பகலுக்குப் பின்னர் வெளியாகின.

பிற மாவட்டப் பாடசாலைகளின் பெறுபேறுகள் உடனடியாக அந்தந்தப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

யாழ். மாவட்ட பாடசாலைகளின் பரீட்சைப் பெறுபேறுகள் இன்று பாடசாலைகளுக்கு எடுத்துவரப்படவுள்ளன.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அடுத்தவாரம் அனுப்பி வைக்கப்படும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்று வெளியான பெறுபேற்றின் அடிப்படையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி முன்னணிப் பெறுபேறு வருமாறு,

கு. குகானந் 8ஏ,2பி, எஸ்.கஜநீதன் 7ஏ,3பி, எஸ்.கோபிராஜ் 5ஏ,4பி,சி, ப.பிருந்தா 5ஏ,4பி,சி, யோ. பிரியசாலினி 5ஏ,3பி,2சி, எஸ்.விஜயதீபன் 4ஏ,4பி,எஸ்.

இதேவேளை யாழ். குடாநாட்டு பாடசாலைகளின் முன்னணிப் பெறுபேறுகள் அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்படும் பட்சத்தில் அப் பெறுபேறுகள் வலம்புரியில் பிரசுரிக்கப்படும். (ச)

## பாப்பரசரின் மறைவுக்கு தலைவர் பிரபா அனுதாபம்





(கிளிநொச்சி)

மானிடத்தின் விடிவுக்காக அயராது உழைத்த ஒரு மகத்தான ஆன்மீகத் தலைவரை உலகம் இழந்துவிட்டது என தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் மறைவு குறித்து நேற்று வெளியிட்ட இரங்கல் செய்தியில் அவர் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

உலக சமாதானத்திற்கும், தேசங்கள் மத்தியிலான சகவாழ்விற்கும், சகல மதத்தவர்களதும் ஒத்திசைவான நல்லுறவுக்கும், புனித பாப்பரசர் ஆற்றிய பணி அற்புதமானது, அனைவராலும் போற்றப்படுவது.

உலகத்தின் உன்னதமான ஆன்மீகத்தலைவர் என்ற ரீதியில், வறுமைப்பட்ட மக்களதும், ஒடுக்கப்பட்ட இனங்களினதும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் நேற்று கண்டனப் பேரணி

(கிளிநொச்சி)

சமாதான காலத்தில் மறைமுகமாகவும் நேரடியாகவும் விடுதலைப் புலிகளின் மீதும் பொதுமக்களின் மீதும் இராணுவத்

வீதி, பரந்தன் வீதியூடாகச் சென்று புதுக்குடியிருப்புச் சந்தியை சென்றடைந்தது.

அங்கு முல்லை மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சண்

## கிழக்கு கொலைகளை கண்டித்து நேற்று யாழில் கண்டனப் பேரணி

(யாழ்ப்பாணம்)

கிழக்கில் அண்மைக்காலமாக விடுதலைப் புலிகளின் அரசியல் போராளிகள்,

அங்கு நல்லூர் பிரதேச பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் செயலாளர் ச. சிவஞானசேகரம் கோரிக்கைகள் அடங்கிய

# முல்லைத்தீவில் நேற்று கண்டனப் பேரணி

(கிளிநொச்சி)

சமாதான காலத்தில் மறைமுகமாகவும் நேரடியாகவும் விடுதலைப் புலிகளின் மீதும் பொதுமக்களின் மீதும் இராணுவத் தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் தாக் குதல் சம்பவங்களைக் கண்டித்து நேற்று முல்லைத்தீவில் கண்டனப் பேரணியொன்று நடாத்தப்பட்டது.

இதற்கான ஏற்பாட்டை முல்லை மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஏற் பாடு செய்திருந்தது. நேற்றுக் காலை 10 மணிக்கு புதுக்குடியிருப்பு மாத்தளன் வீதி யிலிருந்து ஆரம்பமான பேரணி முல்லைத் தீவு புதுக்குடியிருப்பு வீதி, ஒட்டிசுட்டான் வீதி, பரந்தன் வீதியூடாகச் சென்று புதுக் குடியிருப்புச் சந்தியை சென்றடைந்தது.

அங்கு முல்லை மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சண் முகநாதன் தலைமையில் கண்டனக் கூட் டம் நடைபெற்றது. கண்டன உரைகளை முல்லை வலய உதவிக் கல்விப் பணிப் பாளர் நாகரத்தினம், முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலை வர் ஆ. மரியதாஸ், முல்லை மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆகியோர் நிகழ்த் தினர்.

பேரணியில் முடிவில் ஜனாதிபதி மற் றும் ஐ.நா. பொதுச் செயலருக்கான மக ஜர்கள் கையளிக்கப்பட்டன. (ச)

# கிழக்கு கொலைகளை கண்டித்து நேற்று யாழில் கண்டனப் பேரணி

(யாழ்ப்பாணம்)

கிழக்கில் அண்மைக்காலமாக விடு தலைப் புலிகளின் அரசியல் போராளிகள், பொதுமக்கள் தாக்கப்படுவதைக் கண்டித் தும் இடம்பெயர்ந்த மக்களை தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனு மதிக்குமாறு கோரியும் நேற்று காலை யாழ். நகரில் மாபெரும் கண்டனப் பேரணி யொன்று நடைபெற்றது.

ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்ட இப் பேரணியானது நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் இருந்து ஆரம்பமாகி நல்லூர் வீதியூடாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலு வலகத்தை சென்றடைந்தது.

அங்கு நல்லூர் பிரதேச பொது அமைப் புக்களின் ஒன்றியத்தின் செயலாளர் ச. சிவஞானசேகரம் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை இலங்கை போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட பதில் அதிகாரி எவாயற்றோ வீனோனனிடம் கையளித்தனர்.

மகஜரின் பிரதிகள் வெளிநாட்டுத் தூத ரகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. இப் பேரணியில் கலந்துகொண்ட மக்கள் "குடியிருப்புக்களும், பள்ளிக்கூடங்களும் முள்ளுக் கம்பிகளால் முற்றுகைக்குள் ளது"

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் விவகாரக் குழு 17 ஆம் திகதி நாடு திரும்பும்

ஐரோப்பிய விஜயத்தினை மேற் கொண் டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் எதிர்வரும் 17 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசி யல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக் குழுவினர் கடந்த ஒரு மாத காலமாக ஐரோப்பிய விஜயத்தினை மேற் கொண்டிருந்தனர். இவர்கள் இவ் விஜயத் தின்போது சுனாமி ஆழிப் பேரலையின் பின்னரான நிவாரண நடவடிக்கைகளுக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சார சபை மறுசீரமைப்புக்கு மேலும் 30 மில்லியன் டொலர்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை மறுசீரமைப் பதற்காக மிகுதியாகவுள்ள 30 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் வழங்கத் தீர மானிக்கப்பட்டுள்ளதாகத் ஆசிய அபி விருத்தி வங்கியின் இலங்கைக்கான வதி விடப் பணிப்பாளர் அலெக்சாண்ட் பியூ தெரிவித்துள்ளார்.

இந்த நிதி மின்சார சபை மறுசீரமைப்பு நடவடிக்கையின் முன்னேற்றத்தை பொறுத்தே வழங்கப்படும். அத்துடன் எதிர்வரும் யூன் மாதத்திற்குள் மின்சார சபை நிறுவனமாக மாற்றியமைக்கும் நடவடிக்கை எடுக்கப்படு மாயின் இந்த நிதி உடன் வழங்கப்படும்.

இலங்கை மின்சார சபை மறுசீரமைப் புக்காக வழங்கப்பட்டுள்ள 60 மில்லியன் அமெரிக்க டொலரில் 30 மில்லியன் டொலர் ஏற்கனவே இலங்கைக்கு வழங்கப்பட்டுள் ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-8)

## எதிர்வரும் 18 ஆம் திகதி புதிய போப் தெரிவு

(வத்திக்கான்)

புதிய பாப்பரசரை தெரிந்தெடுக்க வத் திக்கான் கர்தினால்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி ஒன்றுகூடவுள்ளதாக வத்திக் கான் அறிவித்துள்ளது.

சுமார் 120 கர்தினால்கள் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றவுள்ளனர். சிஷ்டின் தேவாலயத்தில் வெளியார் யாரும் அனு மதிக்கப்படாத நிலையில் இந்தக் கூட்டம் நடைபெறும். அவர்கள் ஒருமித்த முடிவை எட்டிய பின்பே வெளியே வருவார்கள் என வத்திக்கான் அறிவித்துள்ளது. (த-4)

EXPOAIR யாழ் கொழும்பு எக்ஸ்போ எயார்
தினசரி விமான சேவை
T.P: 021 222 3891 / 5297, 0772 348888, 0772 349999
Your friend in the skies... E-Mail: j... @ expoavi.com, reservations @ expoavi. com,



# காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரியம்மன் ஆலய

# சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா - 07.04.2005



## தேவஸ்தான பிரதம குருவின் அருளாசியுரை

உலகம், உயிர், இறைவன் ஆகியவற்றினுள்ளே ஊடுருவியுள்ள ஆற்றலே பராசக்தி ஆகும். அந்த சக்திதேவி எல்லாம் வல்லவள். எங்கும் எதிலும் நிறைந்தவள். உலகத்தை பிரமன் உருவாக்கி படைக்கும்போதும், மகாவிஷ்னு உலகத்தைக் காக்கும்போதும் காலாக்கினியாக ருத்ரா உலகங்களை எல்லாம் அழிக்கும்போதும் இந்த சக்திதேவியே ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களுக்கும் மூல தேவதையாக விளங்குகிறாள். பிரபஞ்சத்துள் அனைத்தும் அவளுக்கு விளையாட்டுப் பொருடகளே.

ஆனந்தமாய், அறிவாய், அமுதமாய் இன்பம தருபவள் காரைநகர் மணற்காடு ஸ்ரீ கும்பநாயக முத்துமாரி அம்பாள். பக்தியோடு தொழுவார்க்கு ஓர் தீங்கும் இல்லையே. அவர்களுக்கு தனம், கல்வி, தளர்வறியாமனம், தெய்வவடிவு, வஞ்சமில்லா இனம் இன்னும் நல்லன உண்டே. தாரண வருஷ மகோஹ்சவத்தின்போது அழித்தல் திருவிழா எனக் கருதப்படும் ரததோற்சவத்திற்குப் புதிய சித்திரத்தேர் சிற்ப சாத்திரங்களுக்கு அமையப்பெற்றுள்ளது.

இத்திருத்தேரில் இன்று 07.04.2005 அம்பாள் பவனி வருகின்ற திருக்காட்சி இடம்பெறுகின்றது. எங்கள் திருக்கோவில் அன்னையைத் ஸ்தாபித்து 400 ஆண்டுகள் நிறைவடையும் இவ் ஆண்டு மஹோற்சவ வீழாவுக்கும், புதிய சித்திரத் தேரோட்டத்திற்கும் பெருமை சேர்க்கிறது. இப்பணியில் நின்ற அனைவருக்கும் அம்பாளின் திருவருளாசி சேரவேண்டும் என பிரார்த்தித்து ஆசி உரைக்கின்றேன்.

ஆலய பிரதமகுரு

**சிவஸ்ரீ நா.ஞானசம்பந்தக் குருக்கள்**

திருமணற்காடு முத்துமாரி அம்மன்

தேவஸ்தானம், காரைநகர்.

## பாராளுமன்ற உறுப்பினரின் வாழ்த்துரை

காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மனுக்கு இன்று புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் இடம்பெறுவதையிட்டு மிக அகமகிழ்வடைகிறேன். எனது மூதாதையர் தொடக்கம் குலதெய்வமாக வழிபட்டு வரும் கும்பநாயகிக்கு அர்ச்சிக்கும் குருக்கள் ஐயாவின் கிரீயை முறை வீசேடமானது. எவரையும் தெய்வத்தின்பால் ஈர்க்கும் தன்மை கொண்ட கிரீயை முறையினை சைவ ஆசார ஆகம விதிப்படி நடாத்துவது குறிப்பிடத்தக்கது.


இவ்வளவு சிறப்புப் பொருந்திய கிரியை முறையைக்கொண்ட ஆலயம் இன்று நீதிமன்றம் முன்நிற்பது கவலைக்குரியது. பக்தர்கள் அடியவர்கள் சுதந்திரமாக வழிபடவேண்டும். எல்லையற்ற பக்தியை பக்தர்களிடம் காணக்கூடியதாகவும், பக்தர்களிடம் ஆலயத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தவும்வேண்டுமெனின் ஆலய நிர்வாக பிணக்குகள் நீதிமன்றம் செல்லாதிருக்கவேண்டும். நிர்வாக பிணக்குகள் தீர்க்கப்பட்டு நீதிமன்றத்திலிருந்து ஆலயம் விடுக்கபடுமானால் இன்னும் எத்தனையோ அபிவிருத்திப் பணிகள் ஆலயத்தின்பால் ஏற்படுத்தமுடியும். இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதே எனது விருப்பம்.

பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சித்திரத்தேர் இன்று வெள்ளோட்டம் காண்கிறது. இதனை அமைக்க அரும்பாடு பட்ட அனைவரும் பாராட்டப்படவேண்டியவர்கள். இதற்கு அனைத்து வழிகளிலும் நிதியுதவ மற்றும் சரீர உதவி புரிந்தவர்களுக்கு அம்பாளின் திருக்கடாட்சம் கிடைக்கவும் சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வினை அகக் கண்ணாலும் புறக்கண்ணாலும் வழிபடுவோருக்கும் அனைத்து சித்திகளும்பெற அம்பாளின் பாதார வீந்தங்களை தொழுது ஆசி கூறுகின்றேன்.


**தி. மகேஸ்வரன்**

பாராளுமன்ற உறுப்பினர்

கொழும்பு மாவட்டம்



## ஆலயத்தின் முகப்புத் தோற்றம்



## திருப்பணிச் சபையினரின் உள்ளத்திலிருந்து...

காரைநகர் மணற்காட்டு முத்துமாரி அம்மனின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று நடப்பதையிட்டு மிக்க மகிழ்வடைகிறோம். கடந்த இரு வருடங்களரக எங்கள் உறுப்பினர்களின் அயராத முயற்சியினாலும் பக்தர்கள் கொடை வள்ளல்கள் என்போரது தாராள அன்பளிப்பாலும் இச் சித்திரத்தேர் உருப்பெற்று இன்று வெள்ளோட்டமாக வீதியுலா வருகிறது.

இச் சித்திரத் தேரினை உருவாக்கி மெருகூட்டி தமது கைவண்ணத்தைக் காட் டிய சிற்பாச்சாரியாரான அராலியூர் ஸ்தபதி வீஸ்வப் பிரம்மஸ்ரீ சி.அமரசிங்கம், அவரது குழுவினரையும் மனதாரப் பாராட்டுவதுடன் இத் திருப்பணிக்கு நிதியுதவீ வழங்கிய அனைத்து கொடை வள்ளல்களுக்கும் திருப்பணீச் சபையின் சார்பில் நன்றி கூறுவதுடன் திருப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் அம்பாளின் அருட்கடாட்சம் கிடைக்க அம்பாளின் பாதார விந்தம் பணிந்து தொழுகின்றோம்.

**தேர்த் திருப்பணி சபையினர்.**

**மலரமைப்பு: வலம்புரிச் செய்தியாளர் காரைநகர்**

(C-1214)

## ஸ்தபதியாரின் ஆசிச்செய்தி

ஓம் விராட் விஸ்வப் ப்ரம்மனே நமஹ

எம்மையெல்லாம் பெருந் தொண்டாற்ற வைத்து பெரும் புகழும் பெருவாழ்வும் வாழ வைத்த அராலி வடக்கு இலந்தைத் தாழ்வு முருகப்பெருமான் திருவருள் துணைகொண்டு,

எல்லாம்வல்ல அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகி காரைநகர் மணற்காட்டுறை கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரி அம்பிகையின் பாதாரவிந்தங்களை வேண்டி மேற்படி அம்பீகைக்கு சித்திரத்தேர் அமைப்பதற்கு எமக்கு வாய்ப்பினைத் தந்த அவ்வூர் அம்பிகை அடியார்கள் மற்றும் ஆலய திருப்பணி சபையீனருக்கும் அவரகள் சார்ந்தவர்களுக்கும் நன்றிகள் கூறக் கடமைப்பட்டுள்ளேன். ஒரு தேரினை திறம்பட அமைப்பதென்றால் அதில் பலவகை சிரமங்கள் உள்ளன. அதில் சிறந்த மரங்களைத் தெரிவு செய்தல், உரிய காலத்தில் அவற்றைப் பெற்றுக்கொள்ளல், சிறந்த தொழில் ஆற்றல் உள்ளவர்களின் பற்றாக்குறை போன்றவை குறிப்பிடத்தக்கீது. இருப்பினும் நாம் ஏற்ற பணியினை எமக்குத் தெரிந்தவகையில் பல சிறந்த சிற்பங்களுடனும், நான்கு குதிரைகள் பிராமி போன்றவற்றுடன் முகபத்திர அமைப்பில் எனது உறவினர், குழுவினருடனும் அமைத்துள்ளேன்.

இத் திருப்பணியில் என்னுடன் இணைந்து பணியாற்றிய எனது குழுவினருக்கும், பலவிதத்திலும் உதவிகள் புரிந்தோருக்கும், திருப்பணிக்கு பொருள் உதவி பண உதவி புரிந்தோருக்கும் இத் திருப்பணி இனிதே நிறைவெய்த வேண்டுமென மனதார நினைத்த அன்புள்ளங்கள் யாபேருக்கும் சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு வாழ அம்பிகையின் திருவடிகளை வேண்டி வாழ்த்தி (07.04.2005) இன்று நடைபெறுகின்ற வெள்ளோட்ட விழாவிலும் தொடர்ந்து நடைபெறுகிற தேர்த்திருவிழாவிலும் பங்குகொண்டு அம்பிகையின் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றேன்.

இத்தேரின் சிற்ப ஆற்றலை இலங்கையிலும், இந்தியாவிலும், தனது சிற்பத் திறமையால் எமக்கு புகழ்தேடித்தந்த எனது அன்புச் சகோதரர் இளைப்பாறிய ஆசிரியர் திரு.சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை (அரசு மாஸ்ரர்) அவர்களின் ஞாபகார்த்தமாக அம்பிகைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

""என் கடன் பணி செய்து கிடப்பதே""

ஸ்தபதி விஸ்வப் பிரம்மஸ்ரீ

**சி.அமரசிங்கம் ஆச்சாரியார்.**

## பெறுநர் ஆசியுரை

பிரசித்தமான காரைநகர் மண்ணில் பிரபல்யமான பல சைவ ஆலயங்கள் அமைந்துள்ளன. இவற்றுள் காரைநகர் மத்தியில் அமைந்துள்ள மணற்காடு என்னும் இடத்தில் எழுந்தருளி யாபேருக்கும் தனது அருட்பார்வையினால் சகல சௌபாக்கியங்களையும் வழங்கிக்கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரி அம்மனுக்கு ஓர் சித்திரத் தேர் வேண்டுமென காரைநகர் மக்கள் யாபேரும் திடசங்கற்பம்பூண்டு ஓர் புதிய சித்திரத் தேரினை அராலியூர் சிற்பாச்சாரியார் ஸ்தபதி விஸ்வ பிரம்மஸ்ரீ அமரசிங்கம் அவர்களின் கைவண்ணத்தில் உருவாக்கி அதனை வெள்ளோட்டம் விடும் இந் நாளில் இவ்விழா சிறப்புற நடைபெற எனது நல்லாசிகள் பல.

மேலும் இச் சித்திரத் தேர் உருவாக பண உதவி புரிந்தோர், தமது உடல் உழைப்பை நல்கியோர், மனத்தாலும் செயலாலும் இச் சித்திரத் தேர் இனிதே நிறைவுறவேண்டும் என எண்ணிய அன்பர்கள் போன்ற அனைவருக்கும் அம்பாளின் அனுக்கிரகம் உண்டாக எனது ஆசிகள்.

**வே. நடராஜா**

ஆலய பெறுநர்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## இன்று ஒரு தகவல்

# ஏழையின் உருவில் இறைவன்

ஆன்மிகப் பெரியவர் ஒருவர் நீண்ட நாட்களுக்கு முன்பு திருநெல்வேலி மாவட்டத்தில் சுற்றுப் பயணம் போய்க்கொண்டிருந்தார். பல்லக்கு பின்னால் போகும். ஆனால் அவர் நடந்து தான் செல்வார்.

ஒருநாள் மாலை நான்கு மணி இருக்கும். அந்தப் பெரியவர் ஒரு தெருவின் வழியாகப் போய்க் கொண்டிருந்தா. வழியில் ஏகப்பட்ட அடியார்கள் அவரிடம் வந்து வணங்கி ஆசீர்வாதம் வாங்கிக்கொண்டு போனார்கள். பல சிறுவர்கள் பாட்டுப் பாடிக்கொண்டே அங்கே நின்று கொணடிருந்தார்கள். பெரியவர் அந்தக் குழந்தைகளைப பார்த்தார். எல்லாம் ஏழைக்கு குழந்தைகள்.

அவர்கள் போட்டிருந்த உடைகள் மிகவும் அழுக்காக இருந்தது. கிழிந்திருந்தது. இன்னும் சில குழந்தைகளுக்கு ஆடையே இல்லை. பார்ப்பதற்குப் பாவமாக இருந்தது. பெரியவர் இநதப் பிள்ளைகளைப் பார்த்தார். அவரது கருணை உள்ளம் உருக ஆரம்பித்து விட்டது. நடந்து போய்க்கொண்டிருந்த அவர் மேற்கெண்டு போகாமல் அங்கேயே நின்றுவிட்டார்.

அவர் அந்த இடத்திலேயே நின்றவுடன் அவரது காரிய தரிசிக்கு மிகவும் கவலையாகிவிட்டது. ஏனென்றால் பெரி யவர் ஒரு முக்கியமான காரியத்திற்காக அடுத்த ஊருக்கு அதிவிரைவாக போய்ச் சேரவேண்டும். அதனால் கிடு கிடெனறு பெரியவரிடம் ஓடினார். அடுத்த ஊருக்குப் போக வேண்டிய அவசர நிலையை ஞாபகப் படுத்துவதற்காக மிகவும் பணிவாக ஆரம்பித்தார்.

ஆனால் அதற்கு முன்பே பெரியவர் இவரை அருகில் அழைத்து காதோடு காதாக ஏதோ சொன்னார். இதைக் கேட்டவுடன் காரியதரிசி மிகவேகமாக அங்கிருந்து எங்கேயோ ஓடினார். அவர் போனபின்பு பெரியவர் மீண்டும் அந்தக் குழந்தைகளைப் பாடச் சொல்லி மிகவும் பிரியமாக கேட்டுக் கொண்டிருந்தார்.

நீண்ட நேரமாகிவிட்டது. மணி ஆறு இருக்கும். காரிய தரிசி நிறையப் பொருட்களை அள்ளிக்கொண்டு வந்து சேர்ந்தார். அவற்றைப் பிரித்தார். எல்லாம் குழந்தைகள் போட்டுக் கொள்வதற்கான சட்டை மற்றும் துணிமணிகள். காரியதரிசி மிகவும் கெட்டிக்காரர். பெரியவரின் குறிபபறிந்து ஓடும் அவசரத்திலும் அங்கே எத்தனை குழந்தைகள் உள்ளனர்? ஆண்பிள்ளைகள் எத்தனை? பெண் பிள்ளைகள் எத்தனை? யார் யாருக்கு என்ன வயதிருக்கும்? எல்லாவற்றையும் கவனமாகப் பார்த்துக்கொண்டு போய் அவரவருக்கு ஏற்றாற் போல் வாங்கிக் கொண்டு வந்து விட்டார்.

பெரியவர் அந்தக் குழந்தைகள் எல்லோரையும் அருகில் அழைத்து ஆசீர்வதித்தார். தனது கையாலேயே அத்தனை குழந்தைகளுக்கும் அந்தச் சட்டைத்துணிமணிகளை எடுத்துக்கொடுத்தார். அந்தப் பிள்ளைகளுக்கெல்லாம் மிகுந்த சந்தோஷம். உடைகளை வாங்கி மிகவும் உற்சாகத்துடன் போட்டுக்கொண்டனர். ஆனால் அந்தப் பெரியவருடன் வந்திருந்த எல்லோரும் தவித்துக் கொண்டிருந்தார்கள். பக்கத்து ஊருக்குப் போய்

# இடதுசாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தற்போது ஜே.வி.பியும் எதிர்கொண்டுள்ளது

## கமல் கருணாதாஸ

(கொழும்பு)

**முதலாளித்துவத்துடன் இணைவதினால் இடதுசாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மக்கள் விடுதலை முன்னணியும் தற்போது எதிர்கொண்டுள்ளதாக மக்கள் விடுதலை ஒத்துழைப்பு முன்னணியின் பொதுச் செயலாளர் கமல் கருணாதாஸ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்த மக்கள் விடுதலை முன்னணி மக்களின் உரிமைகளை பாதுகாக்கத் தவறியுள்ளது.

இந்தக் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டதன் பின்னர் தான் வலதுசாரி வர்க்கத்தின் சேவைகளுடன் செயற்படும் மேலும் ஒரு அரசியல் கட்சியாக மாற்றமடைந்துள்ளது.

கம்யூனிஸம் மற்றும் சமசமாச உறுப்பினர்கள் வலதுசாாிகளுடன் இணைந்து இன்று அமைச்சுக்களைப் பெற்று இசைவாக்கத்தையும் பெற்றுள்ளனர்.

வலதுசாரிகளுடன் இணைந்த இடதுசாரி அமைபபு நிச்சயமாக அழிந்துவிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ரு-8)

# மின்சார சபை, பெ. கூ.தாபனத்தை மீளமைப்பதற்கு ம.ஐ.மு கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றை மறுசீரமைக்கும் உத்தேச வேலைத்திட்டம் கடுமையாக விமர்சிக்கப்பட வேண்டுமென்று மக்கள் ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

இந்த உத்தேச வேலைத்திட்டம் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை ஆராய்வதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலுள்ள பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் அவசரப் பேச்சுவார்த்தையொன்றை நடாத்த வேண்டுமென்று மக்கள் ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

கட்சியின் செயற்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்ற போது இந்த விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இதன் பின்னர் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

விடுதலைப்புலிகள் அமைப்புக்குச் சொந்தமானதாகக் கூறப்படும் விமான ஓடு தளம் குறித்து ஆராய்வது தேசிய பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு முக்கியமானதென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(ரு-8)

# பல்கலைக்கழக விடுதியில் தங்கியுள்ள மாணவர்களை வெளியேறுமாறு உத்தரவு

(கொழும்பு)

ஸ்ரீ ஜயவர்த்தன புர பல்கலைக்கழகத்தின் மாணவ விடுதிகளில் தங்கியுள்ள சகல மாணவர்களையும் நண் பகல் 12 மணிக்கு முன்னர் அங்கிருந்து வெளியேறுமாறு பல்கலைக்கழக அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் முதல் ஜயவர்த்தன புர பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களையும் காலவரையறையின்றி மூடுவதற்கு தீர்மானித்ததன் காரணமாக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சண்டிம விஜயபண்டார தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கருத்துத்தெரிவிக்கையில், சில சிரேஷ்ட மாணவர்கள் நிர்வாக அதிகாரிகளின் ஆணைக்கு இணங்காது பல்கலைக்கழக வளாகத்திற்குள் நுழைய முயற்சித்தார்கள்.

இதனால் புதிய மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய பல்வேறு பகிடிவதைகளை தவிர்ப்பதற்காகவே இத்தீர்மானத்தை எடுத்துள்ளோம்.

இதேவேளை நேற்றுமுன்தினம் பகிடிவதைகள் நடைபெற்றமை தொடர்பாக பல்வேறு தகவல்கள் கிடைத்த போதிலும் பகிடிவதைக்குள்ளான மாண்வர்களிடமிருந்து எதுவித முறைப்பாடுகளும் எமக்குக் கிடைக்கவில்லை.

இந்நிலையில் மாணவர்களின் பாதுகாப்பு நலன் எனபவற்றை கருத்திற்கொண்டு நேற்றுமுன்தினம் மாலை கூடிய பல்கலைக்கழக நிர்வாகசபை அதனை காலவரையறையின்றி மூட தீர்மானித்திருக்கின்றது என்றார்.

(க)

# 80% மக்கள் சமஷ்டிக்கு ஆதரவு என்பது

மணிகளை எடுத்துக்கொடுத்தார். அந்தப் பிள்ளைகளுக்கெல்லாம் மிகுந்த சந்தோஷம். உடைகளை வாங்கி மிகவும் உற்சாகத்துடன் போட்டுக்கொண்டனர். ஆனால் அந்தப் பெரியவருடன் வந்திருந்த எல்லோரும் தவித்துக் கொண்டிருந்தார்கள். பக்கத்து ஊருக்குப் போய் பெரியவர் பூஜை ஒன்று செய்ய வேண்டியிருக் கிறது. நேரமோ கடந்து விட்டது! என்ன செய்வது?

காரியதரிசி மீண்டும் பயபக்தியுடன் பெரியவரை நெருங்கினார். "விரைவாகப் புறப்பட்டால் பரவாயில்லை. பக்கத்து ஊரில் பூஜை இருக்கிறது" என்றார். அதைக் கேட்டதும் அந்தப் பெரியவர் என்ன சொன்னார் தெரி யுமா? "பூஜையா? அதுதான் இங்கேயே ஆகிவிட்டதே? அந்த ஏழைக் குழந்தைகளுக்கு ஆடைகள் கொடுத்தோமே அதுதான் பூஜை! இதுபோதும்" என்றார்.

ஏழைகளின் உருவில் இறைவனைப் பார்க்க வேண்டும் என்று சொல்கிறோமே அதற்கு இதுதான் உதாரணம். இதைச் சரியாகப் புரிந்து கொள்ளாத சிலர் இறைவனையே ஏழையாக்கி பார்த்துவிடுகிறார்கள். ஆமாம் ஆண்டவன் போட்டிருக்கும் நகையையே அடித்துக்கொண்டு போய் விடுகிறார்களே சார்!

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வலயமட்ட கரபந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வலிகாம வலய மட்ட கரபந்தாட்டப் போட்டியில் 15,17 வயதுப் பிரிவுகளில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி சம்பியனாகியது.

வலிகாம வலய கரபந்தாட்டப் போட்டிகள் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த மாதம் 30ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது .

இப்போட்டியில், 15 வயதுப் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அதனை எதிர்த்து ஆடிய ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தை 2:0 செற்களாலும்,17 வயதுப்பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதனை எதிர்த்து ஆடிய சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தை 2:0 செற்களாலும் வெற்றியீட்டி வலய மட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டன.இவ்வருட மாவட்ட மட்டப் போட்டிக்கு 15,17 வயதுப் பிரிவுகளில் இவ் விரு அணிகளும் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது. (ஞ)

இணங்காது பல்கலைக்கழக வளாகத்திற்குள் நுழைய

(க)

# 80% மக்கள் சமஷ்டிக்கு ஆதரவு என்பது உண்மைக்குப் புறம்பான தகவலாகும்

## சோமவன்ச அமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் 80வீதமானோர் சமஷ்டி முறைக்கு விருப்பம் கொண்டிருப்பதாகக் கூறப்படுவதானது உண்மைக்குப் புறம்பான தகவல் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சேமாவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.



சமஷ்டி முறையை ஏற் படுத்துவதற்கு மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு ஒன்றை நடத்தினால் அதனை தோல்வியடையச் செயயப்போவதாகவும், இதற்காக மக்களை தயார்படுத்தும் நடவடிக்கைகள் இப்போது முதல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அநுராதபுரம் பொது உள்ளக விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் 34 ஆவது ஏப்ரல் வீரர்கள் நினைவு தின நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் மோமவன்ச அமரசிங்கவின் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவம், 1971 ஆம் ஆண்டு உயிரிழந்த மக்கள் விடுதலை முனனணியின் உறுப்பினர்களின் நினைவாக நடாத்தப் பட்டது.

தற்போது பலராலும் கூறப்படும் சமஷ்டி முறைக்கு 80 வீதமான ஆதரவு இருக்குமானால் அதனை 20 வீதமாகக குறைக்க தமது கட்சிக்கு முடியும் என்றும், அதற்கான மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படும் பட்சத்தில் அதனை தோல்வியடையச் செய்வதற்கு ஜனநாயக ரீதியிலான அமைதியான செயற்பாடுகள முன்னெடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற)

# இலங்கை மக்கள் வேடர்களாகும் நிலை

(கொழும்பு)

எத்தகைய எதிர்ப்புக்கள் ஏற்பட்டாலும் அரசுக்கு சொநதமான கூட்டுத்தாபனங்கள்,சபைகள்,கல்விச் சேவை போன்ற சேவைகளையும் மற்றும் அனைத்துத் துறைகளையும் மறுசீரமைப்பது அத்தியாவசியமானது என நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அரச இயந்திரத்தினை நவீன மயப்படுத்தாவிட்டால் அபிவிருத்தியடைந்த நாட்டு மக்கள் எம்மை வேடர்களாகக் கணிப்பார்கள் என்று தெரிவித்துள்ள நிதியமைச்சர்,சிலரது எதிர்ப்புக்களின் காரணமாக 2கோடி மக்களின் எதிர்காலத்தை வீணடிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார். (7-9)

# 2 காவல்துறை உறுப்பினர் சாவு

(வவுனிக்குளம்)

கடந்த 18.06.1996 அன்று வவுனிக்குளம் பகுதியில் இடம்பெற்ற தவறுதலான விபத்தொன்றின் போது தமிழீழக் காவல்துறை உறுப்பினர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

அன்ரனி கமலராஜ் என்று அழைக்கப்படும் காம்றோ இரண்டாம் வட்டராம் ஊர்காவல்துறையை நிரந்தர முகவரியாகவும் அந்தோனியார் கோவிலடி நாவற்குழியை தற்போதைய முகவரியாகவும் கொண்ட கீத பொன்கலன் அன்ரனி கமல்ராஜ் என்ற காவல்துறை உறுப்பினரே சாவடைந்துள்ளார்.

இதேவேளை கடந்த 17.6.1996 அன்று வவுனிக்குளம் பகுதியில் இடம்பெற்ற மற்றொரு தவறுதலான விபத்தின் போது தமிழீழ காவல்துறை உறுப்பினர் ஒருவர் சாவடைநதுள்ளார்.

சசிக்குமார் என்று அழைக்கப்படும் சோலையாவளவு தெல்லிப்பழையை நிரந்தர முகவரியாகவும் கண்டாவளை புளியங்கோப்பனை,கிளிநொச்சியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் சசிக்குமார் என்ற காவல்துறை உறுப்பினரே சாவடைநதுள்ளார். (ற-4)




காரைநகர்

திருமணற்காடு அருள்மிகு ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரியன்னையின்

# சித்திரத் தேர்விழா சிறப்பிதழ் 07-04-2005



**தீர்வு தந்து திருநாட்டைக் காக்க தேரேறி வருகிறாள்!**



இல்லையென்று இரங்குவோர்க்கு அருள்புரியும் மாரி
இந்நாட்டின் சமாதான நாயகியாய் தேரேறி வருகிறாள்
தில்லைக் கூத்தன் அருள்புரியும் தேசத்தில் அருளும் மாரி
தீர்வு தந்து திருநாட்டைக் காத்திட தேரேறி வருகிறாள்
எல்லையில்லா துயரெல்லாம் போக்கிடும் மாரி
எழிலார்ந்த மணற்காட்டில் தேரேறி வருகிறாள்
உள்ளமெலாம் நிறைந்து அருளுகின்ற மாரி
உரிமைதனைத் தந்தருள சித்திரத் தேரினில் வருகிறாள்.

பங்கயத் தாள்நோக பகலிரவாய் நின்றருளும் மாரி
பரவுவோர்க்கு நல்லருள் புரிய தேரேறி வருகிறாள்
மங்கையர்கள் போற்றிட பொங்கிடும் பொலிவுடன்
மாங்கல்யம் அருளிட மாரி தேரேறி வருகிறாள்
சிங்கத்தின் மீதமர்ந்து புதிய சித்திரத் தேரேறி
தீமைகள் அனைத்தையும் கொய்திட தேரேறி வருகிறாள்
தீங்குகள் இல்லாத தேசத்தைக் காத்திட மாரி
தீர்வு தந்து திருநாட்டைக் காக்க தேரேறி வருகிறாள்.

*கவிமாமணி - மதுரகவி. காரை. எம்.பி.அருளானந்தன்.*

**சித்திரத் தேரேறிவரும் அன்னையின் தேர்விழா சிறக்க வாழ்த்துவோர்**

**மோகன் வர்த்தக நிலையம்**
இல.2, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

**பிள்ளையார் வெல்டிங் தொழிலகம்**
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர் : வை. கந்தசாமி.

**ரட்ணம் பார்மசி அன்ட் குறோசறி**
384, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P-2667

**வேல் முருகன் ஆலை**
113, 115, மானிப்பாய் வதி, யாழ்ப்பாணம்.
T.P - 5468
**வேல் முருகன் அரிசி ஆலை**
தொல்புரம், சுழிபுரம்.

## மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களை விடுவிப்பதற்கு பணியகம் நடவடிக்கை

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கபபட்டுள்ள இலங்கையர் மூவரை விடுதலை செய்வது குறித்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கவனம் செலுத்தி வருகின்றது.

இவர்களை விடுதலை செய்வதற்கான சகல சட்டரீதியான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப பட்டு வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படடிருக்கிறது.

சவுதி அரேபியாவுக்குத் தொழிலவாய்ப்புப் பெற்றுச் சென்ற மூன்று இலங்கையருக்கு குற்றம் ஒன்று தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்நாட்டு நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்படும் வழக்கு விசாரணைக்குத் தேவையான கட்டணங்களை வெளிநாட்டுப் பணியகம் செலுத்தத் தீமானித்திருக்கின்றது. தொழில் அமைச்சின் ஆலோசனைகளுக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த மரண தண்டனை தீர்ப்பை மறுபரிசீலனை செய்யுமாறு கோரி சவுதி அரசாங கத்திடம் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதாகப் பேராசிரியர் விஸ்வ வர்ணபாலா தெரிவித்திருக்கின்றார். (7-8)

## போக்குவரத்துச் சபைக்கு எதிராக மக்கள் மறியல் போராட்டம்

(சாவகச்சேரி)

பன்றித் தலைச்சி அம்பாள ஆலய 3ஆம் பங்குனித் திங்கள் உற்சவ தினத்தன்று பக்தர்களுக்கு விஷேட சேவையாற்றிய இலங்கை போக்குவரத்துச் சபைப் பேருநதுகளை ஆலயச சூழல்வரை செல்லவிடாது தடுத்து பொதுமக்கள் முத்துமாரியம்மன் ஆலயத் தருகில் வீதிமறப்பில் ஈடுபட்டனர்.

2000ஆம் ஆண்டு மே மாதத திற்கு முன்வரை இடம்பெற்ற சாவகச்சேரியிலருந்து புத்தூருடாக சுன்னாகம் - சங்கானை வரையான 775 ஆம் இலக்க பேருந்து சேவையினை மீண்டும் நடாத்துமாறு பல முறை கோரிக்கைவிடுத்தும் அதனை கருத்தில் கொள்ளாது வருமான நோக்கில் ஆலயத்திற்கான விசேட சேவையை நடாத்துவதை எதிர்த்தே போக்குவரத்து சபை பேருந்துக்களுக்கு எதிராக மக்கள வீதிமறியலில் ஈடுபட்டனர்.

போக்குவரத்து சபை முகாமையாளர் எதிர்வரும் புத்தாண்டு தினத்திலிருந்து 775ஆம் இலக்க சேவையை ஆரம்பிப்பதாக உறுதி மொழி கூறியதையடுத்தே எதிர்வரும் இறுதிப் பங்குனித் திங்கள் உற்சவங்களிற்கான விசேட சேவையை அனுமதித்ததாக பொது மக்கள் தரபபில் தெரிவிக்கப்பட்டது. (7-21)

## சுனாமி நிவாரணம் குறித்த புதிய சட்டமூலம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும, இழந்த அவர்களது உடமைகளுக்கும் சட்டரீதியான நிவாரணத்தை வழங்குவது குறித்த புதிய சட்டமூலம் பாராளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தச் சட்டமூலத்தை நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம பாராளுமன்றத்தில் சமாப்பித்தார்.

இதேவேளை, அனர்த்த முகாமைத்துவ சட்டமூலத்தில் எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ள திருத்தங்களை ஏற்றுக்கொள்ள தெரிவுக்குழு இணங்கியுள்ளதாக சமூக நலன்புரி அமைச்சர் சுமேதா ஜி. ஜெயசேன தெரிவித்தார்.

இந்தச் சட்டமூலத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் விவாதத்துக்கென முன்வைத்தார். (ந-8)

## உரிமைகளை பாதுகாக்க ஜே.வி.பி தவறிவிட்டது

(கொழும்பு)

வலதுசாரிகளுடன் இணைவதனால் இடதுசாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மக்கள் விடுதலை முன்னணியும் தற்போது எதிர்நோக்குவதாக மக்கள் விடுதலை ஒத்துழைப்பு முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம நடைபெற்ற ஊடகவியலாளர் மகாநாட்டில்:-

கூட்டமைப்பில் இணைந்த பின்னர் வறுமை நிலையிலுள்ள

ள் கலாநிதி கமல் கருணதாஸ தெரிவித்திருக்கிறார். (7-9)

## நோயாளர்களுக்கு அகத்தியிலை வழங்கிய டாக்டர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மாவட்ட ஆதார வைத்தியசாலையில் சிகிசசைக்காக வரும் நோயாளர்களில் தெரிவு செய்யப்பட்ட ஐம்பது பேருக்கு வைத்திய அதிகாரி எஸ்.அம்பிகைபாகனால் தினமும் அகத்தியிலைக்கட்டு ஒன்று வழங்கப்பட்டு வருகின்றது.

## 100 மீற்றர் எல்லைக்குட்பட்டோருக்கு வீடமைக்க 2 1/2 இலட்சம் கடனுதவி

(கொழும்பு)

100 மீற்றர் எல்லைப் பகுதி

க்கு வருவதாக நகர அபிவிருத்தி யமைச்சு தெரிவித்திருக்கின்றது.

படுத்தப்பட்டால் மாத்திரம் இந்த நிதியுதவிக்கு விண்ணப்பிக்க முடி

கும் பிரச்சினைகளை மக்கள் விடுதலை முன்னணியும் தற்போது எதிர்நோக்குவதாக மக்கள் விடுதலை ஒத்துழைப்பு முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம நடைபெற்ற ஊடகவியலாளர் மகாநாட்டில்:-

கூட்டமைப்பில் இணைந்த பின்னர் வறுமை நிலையிலுள்ள வர்க்கத்தினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி தவறியிருப்பதாக மக்கள் விடுதலை ஒத்துழைப்பு முன்ன்ணியின் பொதுச் செயலா

# 100 மீற்றர் எல்லைக்குட்பட்டோருக்கு வீடமைக்க 2 1/2 இலட்சம் கடனுதவி

(கொழும்பு)

100 மீற்றர் எல்லைப் பகுதியில் குடியிருப்போர் அங்கிருந்து வெளியேறி வேறோர் இடத்தில் வீடுகளை நிர்மாணித்துக்கொள்வதற்கு உதவி வழங்கும் செயற்திட்டம் நாளை முதல் அமுலுக்கு வருவதாக நகர அபிவிருததி யமைச்சு தெரிவித்திருக்கின்றது.

இவர்களுக்கு வீட்டை அமைத்துக் கொள்வதற்காக 2இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்படும் எனறு அமைச்சின் செயலாளா ரி.ஹேவகே தெரிவித்துள்ளார்.

இத்திடடத்தின் அடிப்படையில் முதல் மாதத்தில் 50 ஆயிரம் ரூபா வழங்கபபடுவதோடு மிகுதித்தொகை 3 தவணைகளில் வழங்கப்படும்.

கடல் மட்டத்திலிருந்து 100 மீற்றர் எல்லைக்குள் வீடு அல்லது காணிகள் இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரம் இந்த நிதியுதவிக்கு விண்ணப்பிக்க முடியும் என்று நகர அபிவருத்திய மைச்சு தெரிவிக்கின்றது.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய வர்த்தக வங்கிகளினூடாக இந்நிதியுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்குத் தேவையான விண்ணப்பபடிவங்கள் குறிப்பிட்ட வங்கக் கிளைகளுக்கு அனுபபிவைக்கபபடடுள்ளதாகவும் அமைசசின் செயலாளர் தெரிவித்துள்ளார். (7-9)

# நிவாரணம் கிடைக்காது 30 குடும்பங்கள் ஏமாற்றம்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட 30 குடும்பஙகள் தமக்குரிய நிவாரணங்கள் வழங்கப்படவில்லையென ஏமாற்றம் தெரிவித்துள்ளன.

கடந்தகால யுத்தத்தினால் பாதிக்கப்படடு அதிலிருந்து மீள்வதற்கு முன்னர் சுனாமியினாலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்நிலையில் எமக்கு நிவாரணமெதுவும் வழங்கப்படவில்லை. ஆனால் சில இடங்களில் சுனாமியினால் பாதிக்கப்படாத மக்களுக்கு சுனாமி நிவாரணம் வழங்கப்படுகின்றது. இது மனித உரிமைகளை மீறும் செயலாகும்.

இதுதொடர்பாக உரியவர்கள் நடவடிக்கை எடுக்காவிடடால் தாம் மனத உரிமை ஆணைககுழுவில் முறைப்பாடு செய்யப்போவதாக அக் குடும்பங்கள் தெரிவித்துள்ளன. (7-43)


## விற்பனைக்கு

சகலவிதமான சொனி, பனசொனிக் ரொசிபா கலர் T.Vகளையும், CD, VCD, DVDகளையும், ரேடியோ கசற் றெக்கோடர்களையும், ரைஸ்குக்கர், காஸ்குக்கர், பிறைசோ குக்கர், மின்விசிறிகள், அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப் செற்கள், சிற்றிசன், சீகோ கைமணிக்கூடுகளையும், சுவா மணிக்கூடுகளையும், மின்சாரப் பொருட்களையும், அன்பளிப்பு அலங்காரப்பொருட்களையும் ஒரே இடத்தில் நிதான விலையில் பெற்றுக் கொள்ள

**நியூ சிற்றி ரேடர்ஸ்**

135, கஸ்தூரியார் றோட், குளத்துக்கு முன்பாக, யாழ்ப்பாணம்.

T.P: 222 3226


# 40 ஆவது ஆண்டு நிறைவு போட்டி முடிவுகள்

சுண்டிக்குளி கிறீன் கிங்ஸ் விளையாடடுக் கழகம் அதன் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை கடந்த ஒருமாத காலமாக நடாத்தி வந்தது.

இப்போட்டித் தொடரில் இடம் பெற்ற ஒரு சில முக்கிய போட்டிகளின் பெறுபேறுகள் வருமாறு,

45 கிலோ மீற்றர் துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டி முதலாம் இடம் - பண்டத்தரிப்பு துரைராசா றஜீம், இரண்டாம் இடம் - கொக்குவில கனகரெத்தினம் கமலேஸ்வரன, மூன்றாம் இடம் -அராலி ஜெய சுதசன்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கப்ரின் டி.ஏ.எம்.குணசிங்கமும் கௌரவ விருந்தினராக எம். பிறான்சிஸூம் கலந்துகொணடனர்.

15 கிலோ மீற்றர் மரதன ஓட்டப போட்டியில் முதலாம் இடத்தைப் பண்டத்தரிப்பு என்.காந்தருபனும், இரண்டாம் இடத்தை சுண்டிக்குளி ரி.கவிராஜூம், மூன்றாம இடத்தைப் பண்டத்தரிப்பு எஸ். சிவலோகனும் பெற்றனர்.

இறுதியாக கடந்த ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 7 மணிக்கு இடம்பெற்ற ஓவர் கேம் முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டமும், பரிசளிப்பு விழாவும விளையாட்டுத்துறை பொறுப்பாளர் எல்.நிர்மலன் தலைமையில் நடைபெற்றன.

இறுதி ஆட்டத்தில் சுண்டிக்குளி விளையாட்டுக் கழக அணி, அதனை எதிர்த்தாடிய கொய்யாத் தோட்ட விளையாட்டுக் கழக அணியை இரு நேர் செற்றுகளில் 15:11, 15:13 என்ற புள்ளிகள் கணக்கில் பலத்த போட்டியின் பினவெனறு சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது. (7-110)

## வழங்கும் டாக்டர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மாவட்ட ஆதார வைத்தியசாலையில் சிகிசசைககாக வரும் நோயாளர்களில் தெரிவு செய்யப்பட்ட ஐம்பது பேருக்கு வைத்திய அதிகாரி எஸ்.அம்பிகைபாகனால் தினமும் அகத்தியிலைக்கட்டு ஒன்று வழங்கப்பட்டு வருகின்றது.

வைத்திய அதிகாரியின் மேற பார்வையின் கீழ் வைத்தியசாலை வளவினுள் அமைக்கப்பட்டுள்ள தோட்டத்திலிருந்து போசாக்கை மேம்படுத்தும் நோக்கில் சில தினங்களாக அகத்தியிலை வழங்கப்பட்டு வருகின்றமையைப் பலரும் பாராட்டுகின்றனர்.

மேலும் இத்தோட்டத்தில் வாழை மருத்துவச் செடிகள் உடபட பல பயிர்கள் டாக்டரினால் பயிரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தககது. (7-21)

## லோகநாதன் ஓய்வுபெறுகிறார்

(பொன்னாலை)

யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாகக கடமையாற்றிய நல்லையா - லோகநாதன் எதிர்வரும் 17ஆம் திகதியுடன ஓய்வுபெறவுள்ளார்.

60 ஆவது வயதில் ஓய்வுறும இவர், கடந்த 34 வருடங்களாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் பல்வேறு பதவி நிலைகளில் பணிபுரிந்துள்ளார். (க-49)

## கும்பாபிஷேகம்

(பொன்னாலை)

சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயிலில் 63 நாயன்மார்களுக்கான நூதன பிர்திஷ்டா மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (க-49)




## சமையல் குறிப்புகள்

* எண்ணெயில் கொஞ்சம் உப்பு சேர்த்து விட்டு, பிறகு அதில் பொரிக்க வேண்டியவற்றைப் பொரித்தால் எண்ணெய்ச் செலவு கணிசமாகக் குறையும்.

* எலுமிச்சம்பழம் அதிகம் கிடைக்கும்போது வாங்கி அவற்றின் மேல் கொஞ்சம் தேங்காய் எண்ணெயைத் தடவி திறந்த நிலையில் ஒரு தட்டில் வைத்து ஃப்ரிட்ஜில் வைத்து விட்டால் ஒரு மாதம் வரை அப்படியே இருக்கும்.

* பால் காய்ச்சிய பாத்திரத்தில் படிந்துள்ள ஆடையை சுரண்டியெடுத்து, ரொட்டிமாவுடன் சேர்த்துப் பிசைந்து ரொட்டி செய்யவும். அதிக சுவை கிடைக்கும். சத்தும் அதிகம். பாத்திரத்தை சுத்தப்படுத்துவதும் சுலபம்.

* உளுந்து வடை அதிகம் எண்ணெய் குடிக்கிறதா? உளுந்தை ஒரு மணி நேரத்துக்கு மேல் ஊற வைக்காதீர்கள்.

* உருளைக்கிழங்கு அதிகம் வேக வைக்கிறபோது, தண்ணீரில் கொஞ்சம் மஞ்சள்தூளும், சிலதுளிகள் எண்ணெயும் கலந்து வேக வைத்தால் சீக்கிரம் வேகும்.

* காலையில் செய்த பொரியல், குழம்பு, சட்னி என எது மிஞ்சினாலும் கவலைப்படாதீர்கள். அத்துடன் கொஞ்சம் இஞ்சித் துண்டு விழுது, மிளகாய்த்தூள், வெங்காயம் சேர்த்து வதக்கி, ரொட்டியுடன் வைத்துப் பரிமாறலாம். சாப்பிடுவதற்கு சுவையாக இருக்கும்.

## உங்கள் வாழ்க்கையின்

வாழ்க்கை என்பது நாம் எதிர்கொள்ளும் நிமிடங்களின் தொகுப்பாகும். அது உங்களுடையது. அதை நீங்கள் தான் திட்டமிட்டு, கட்டுப்படுத்தி நீங்கள் தேர்ந்தெடுத்த இலட்சியங்களால் அதை திறம்பட உருவாக்கிக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் அது உங்களை நிர்வகித்துவிடும். அதனால் வாழ்க்கையில் பல பிரச்சினைகளும், தொல்லைகளும், கஷ்டங்களும், வாக்குவாதங்களும், மாறுபாடுகளும் ஏற்படும்.

உங்கள் வாழ்க்கையை நீங்கள் விரும்பகிற முறையைக் கொண்டு அமைத்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் அடுத்தவர்கள் தூக்கி எறிந்த மிகுதியைத் தான் நாம் ஏற்றுக் கொள்ளநேரிடும்.

வாழ்க்கையை மனிதன் நிர்வகிப்பது எப்படியென்றால்...

நாளை விடியும்வரை அது பற்றிய கவலை வேண்டாம். அடுத்த நாளைப் பற்றி இன்றே எண்ணத் தொடங்கினால் அதாவது, நாளைய வாழ்வை இன்றே வாழத்தொடங்கினால் நேற்றைய பிரச்சினைகளுடன் இன்றைய பிரச்சினைகளும் நாளைய பிரச்சினைகளும் சேர்வதால் மனதளவிலும், உடலளவிலும் அதிக சுமைகளையே சுமக்க நேரிடும்.

மனிதன் ஒரு நாளில் ஒரு நாளைய வாழ்வை வாழ்ந்தால் தான் வாழ்வை வெற்றி கரமாக நிர்வகிக்க முடியும். நேற்றைய சுமையுடன் இன்றைய சுமையையும் நாளைய சுமையையும் சுமந்தால் தள்ளாட நேரிடும்.

உடல் அளவிலும் சரி, மனதளவிலும் சரி, உணர்வு பூர்வமாகவும் சரி அதிக சுமையை மனிதன் சுமக்கக் கூடாது என்று மருத்துவ நிபுணர்களும் எச்சரிக்கிறார்கள்.

மின்சார இயந்திரங்களுக்கு அளவோடுதான் மின்சாரத்தைப் பாய்ச்சுகிறார்கள். அதில் அளவுக்கு மீறினால் அது பழுதாகிவிடும். அது போன்றுதான் மனிதனின் அவயவங்கள்.

அந்தந்த நேரத்தில் அந்தந்த வேலையைச் செய்துமுடிக்க வேண்டும். எவ்வளவு பிரச்சினையானாலும் அதை இரவு முடிவதற்குள் தீர்த்துவிடுங்கள்.

இருள்படித்த ந்ாளாக இருந்தாலும், மழை நாளாக இருந்தா



## நிர்வாகி நீங்களே....

இதயம் கூட அதிகம் வேலை செய்தால் நின்றுவிடும். நுரையீரல்களால் கூட அளவுக்கதிகமான காற்றை சுவாசிக்க முடியாது. மூளையால் தனது வயதுக்கு மிஞ்சிய எதையுமே கிரகிக்கமுடியாது. நரம்புகளில் கூட அளவான இரத்தமே ஓடுகிறது. இதன் அளவில் அளவு மீறப்பட்டால் அதன் விளைவாக ஆபத்தான நோய்களே உருவாகின்றது.

நேரத்தைத் திட்டமிடுவதன் மூலம் மனிதன் வாழ்க்கையை நிர்வகிக்க வேண்டும்.

லும் நாளைய விடிவு உங்களுக்கு வெளிச்சத்தையே தரும்.

நேற்று நிமிர்ந்து நின்ற நீங்கள் நாளையும் அவ்வாறே இருக்க முயற்சி செய்யவேண்டும்.

காலம்தான் மனிதனின் வாழ்க்கையாகின்றது. காலத்துக்கு ஏற்றவாறு நீங்கள் வாழாது உங்களுக்கு ஏற்றவாறு காலததை திட்டமிட்டும், கட்டுப்படுததியும் உருவாக்கிக்கொள்ளுங்கள். அதை நீங்கள் நிர்வகியுங்கள். துன்பங்கள் இன்றி வாழலாம்.

## உப்பின் பயன்பாடுகள் ஏராளம்!

‘உப்பில்லாப் பண்டம் குப்பையிலே’, ‘உப்புப் பெறாத விஷயம் இது’... இப்படி உப்புப் பற்றி வாய்க்கு வாய் பலரும் பேசினாலும், உப்பின் மகிமையை இன்னும் யாரும் புரிந்து கொள்ளவில்லை. உப்பில் 100க்கு மேலான பயன்கள் உண்டு. அனால் நாம் ஏதோ உணவில் மட்டும் உப்பை சேர்த்துக்கொள்கிறோம்.

இதோ உப்பின் பயன்பாடுகள் சில: –

*வாய் நாற்றம் எடுக்கிறதே, ரூத் பேஸ்ற் வாங்கவேண்டும் என்று கிளம்பிவிடாதீர்கள். தினமும் காலை, இரவில் தண்ணீரில் சிறிதளவு உப்பு கலந்த கொப்பளியுங்கள். வாய் நாற்றம் போகும்.

*தொண்டை கரகரப்பா? அதற்கும் இதே பாணிதான். தொடர்ந்தும் உப்புத் தண்ணீரை கொப்பளியுங்கள். இரண்டே நாளில் பாட ஆரம்பித்து விடுவீர்கள்.

*தூங்கினாலோ, அழுதாலோ கண் சுற்றிலும் லேசான வீக்கம் இருக்கும். இதைப் போக்க மருந்து வாங்கி விடாதீர்கள். உப்புத் தண்ணீரைத் தொட்டுத் தொட்டு கண்களை சுற்றி அப்பி விடுங்கள்.

*கான்டெக்ட் லென்ஸ் காரணமாக சிலருக்கு வீக்கம் ஏற்படும். அவர்களும் இப்படி உப்புத் தண்ணீரைத் தடவலாம்.

*சில உணவுகள் சாப்பிட்டால் வாய் நாறும். இது சகஜம். ஆனால் தினமும் உப்பு நீரால் கொப்பளித்தால் வாய் நாறாமல் இருப்பதோடு, சுவாசமும் தூய்மையாக இருக்கும்.

*பாத்ரூமில் துர்நாற்றம் வீசுகிறதா? எவ்வளவு கழுவினாலும் கறை போகவில்லையா? கவலையை விடுங்கள். ஒரு ஸ்பூன் உப்பு, ஒரு ஸ்பூன் சலவைச்சோடா, ஒரு ஸ்பூன் வெள்ளை வினீகரை தண்ணீரில் கலந்து பாத்ரூமில் தெளித்து, பரப்பிவிடுங்கள். முப்பது நிமிடம், ஒருமணி நேரம் வரை அப்படியே விட்டு விட்டு கழுவிவிடுங்கள். பாத்ரூம் பளபளக்கும்.

இது போலத்தான் டொய்லெட் சாதனம் மீது படிந்த கறையும் போக பயன்படுத்த வேண்டும். வாரம் ஒரு முறையாவது செய்து வந்தால் போதும்.

*சமையல் அறை அழுக்குப் போகவில்லையா? உப்பு கலந்து தேயுங்கள். பாருங்கள் சுத்தத்தை.

*துணிகளில் கறையா? எலுமிச்சை, உப்பு கலந்து தேய்த்து விடுங்கள். சில நிமிடங்களில் கறை போய்விடும்.

*தரையில் அடிக்கடி பூச்சிகள் நடமாட்டம் இருக்கிறதா? உப்பு கலந்த தண்ணீரைத் தெளித்து துடைத்து விடுங்கள்.

*வெண்கலப் பொருட்கள், மெழுகுவர்த்தி ஸ்டாண்டு, புஜை சாதனங்கள் என்று எல்லாவற்றையும் சுத்தம் செய்ய உப்பு பயன்படும். அசிரிமா உப்பு, வினீகர் கலந்து தேய்த்தால் அழுக்குப் போய்விடும்.

*ஃபிரிஜ் உட்புறம் சுத்தமாக இருக்க உப்பு, சலவைச் சோடா கலந்து தேய்த்து சுத்தம் செய்தால் போதும்.

*ஆரஞ்சு, எலுமிச்சை பழத்தோலை அரைவடிவாகப் பிய்த்து எடுத்து அதில் உப்பை நிரப்பி பாத்ரூமில் வைத்து விடுங்கள். பின்பு பாருங்கள் நாற்றம் போயே போச்சு.

*எந்தப் பாத்திரத்தையும் சிறிது உப்புப்போட்டு தேய்த்து துலக்கினால் போதும் பளீச் என்றாகி விடும்.

உங்களுக்கு ஒரு உண்மை தெரியுமா? பால், பாலாடைக் கட்டி ஃப்ரஷ்ஷாக் இருக்க வேண்டுமானால், அதற்கு சிறிதளவு உப்பு தேவை என்று சொல்கின்றனர் ஐரோப்பியர்கள். அவர்கள் சிறிய அளவில் உப்பு சேர்த்து பாலை ஃப்ரஷ்ஷாக வைக்க முடியும் என்கின்றனர்.

சிறிதளவு உப்பு சேர்த்து அதன் பின்னர் கோப்பியை ஆற்றிக் குடித்தால் சூப்பர் டேஸ்ட் இருக்குமாம். நீங்கள் வேண்டுமானால் டெஸ்ட் பண்ணிப் பாருங்கள்.

ஆப்பிள், உருளைக்கிழங்கு போன்றவை பிரிஜ்ஜில் இருந்து எடுத்து வெட்ட முயற்சித்தால் கெட்டியாக இருக்கும். அதனால் சிறிது நேரம் காத்திருக்கவேண்டும். சிறிதளவு உப்பு சேர்த்து தண்ணீரில் ஆப்பிள், உருளையை போட்டால் மிருதுவாகிவிடும்.

## சமைத்துச் சுவைப்போம்

### வாழைப்பழப் பணியாரம்

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| கோதுமை மா – | 1/4kg |
| ரவை – | 1/4kg |
| முட்டை – | 2 |
| வாழைப்பழம் – | 2 |
| ஏலக்காய் – | 2 |
| சீனி – | 100g |

***செய்முறை:***

கோதுமை மா, ரவை இரண்டையும் பாத்திரத்தில் எடுத்து அதில் இரண்டு முட்டைகளை உடைத்து ஊற்ற வேண்டும். இரண்டு வாழைப்பழங்களையும் உரித்து அதனுடன் சேர்த்து சீனி, ஏலக்காய் என்பவற்றையும் இட்டு தேவையான அளவு நீர் ஊற்றி இட்லிமா வரும் பக்குவத்துக்கு நன்றாகப் பிசையவேண்டும்.

பின்பு தாச்சியில் எண்ணெய் ஊற்றி சூடானதும் ஒரு கரண்டி மாவெடுத்து எண்ணெயில் ஊற்ற வேண்டும். அடிக்கடித் திருப்பிப் போடவும்.

பொன்னிறமாக வெந்தபிறகு வெளியே எடுக்கவும். வாழைப்பழப் பணியாரம் சூடு ஆறியபிறகு சாப்பிட்டால் சுவை இன்னும் அதிகமாக இருக்கும்.

## கூந்தல் ஆரோக்கியமாக இருக்க எளிய வழிமுறைகள் சில.....

வாரம் இருமுறை மிதமான ஷாம்பூ போட்டுக் கூந்தலை அலசவேண்டும். வாரம் இருமுறையாவது கூந்தலுக்கு எண்ணெய் தடவி மாசாஜ் செய்யவேண்டும். மற்றவர்கள் உபயோகிக்கும் துவாய், சீப்பு மற்றும் கூந்தல் அழகு சாதனங்கள் எதையும் உபயோகிக்காதீர்கள். உங்களுக்கென தனியே வைத்துக்கொள்ளுங்கள்.

தலைமுடி ஈரமாக இருக்கும் போது எக்காரணம் கொண்டும் வராதீர்கள். தலை முடியைச் சிலர் நாறுமாதிரி ஈரமின்றிக் காய வைப்பார்கள். அது தவறு. ஈரம் சொட்டும் வரை காய வைத்தால் போதும். பிறகு அது தானாக இயற்கையாகவே உலரட்டும்.

பெரிய, அகலமான, பற்கள் கொண்ட சீப்பால் முடியை வாரவும். கூந்தலைச் சிக்கு எடுக்கும்போது எப்போதும் கீழிருந்துதான் மேல் நோக்கி எடுக்கவேண்டும். தலைமுடியில் ஒரே இடத்தில் நீண்ட நேரம் இறுக்கமான கிளிப்புகள் போன்றவற்றை அணியவேண்டாம்.

# மழை காரணமாக 5 மாடிக் கட்டடம் இடிந்து விழுந்தது




(சென்னை)

சென்னையில் மழை காரணமாக ஐந்து மாடிக் கட்டடமொன்று இடிந்து விழுந்தது. கட்டட இடிபாடுகளுக் குள் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

சென்னை சாந்தோம் சாலையி லுள்ள இந்தப் பழங்கட்டடத்தில் பழுதுபார்க்கும் பணிகள் நடைபெற்று வந்தன.

கடும்மழை காரணமாக அக் கட்டடத்தில் மேல் இரண்டு மாடிகள் இடிந்து விழுந்ததால் பெரும் பர பரப்பு ஏற்பட்டது. சம்பவம் நடந்த நேரத்தில் சுமார் எட்டுத் தொழிலா ளர்கள் பழுபார்க்கும் பணியில் ஈடு பட்டிருந்தனர். இவர்களில் மூவர் மீட கப்பட்டுள்ளனர்.

எஞ்சியவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. (து)



போப் இரண்டாம் ஜோன் பால் உடல் வத்திக்கானில் உள்ள புனித பீட் டர் சேர்ச்சில் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டுள்ளது. கன்னியாஸ்திரி ஒருவர் போப் உடல் முன்பு மனம் உருகி பிரார்த்தனை செய்தார்.



மறைந்த கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவர் போப் ஜோன் பாலின உடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக செயின்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தில் வைக்கப்பட்டது. அவரது இறுதிச் சடங்குகள் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும் என வத்திக்கான் அறிவித்துள்ளது. போப்பின் இறுதிச் சடங்கில் உலகத் தலைவர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர் என்று எதிர்பார்க் கப்படுகிறது. செயின்ட் பீட்டர் தேவாலயத்திற்கு போப்பின் உடல் கொண்டு வரப்படுகிறது.

# மலேசியாவில் தொழிலாளர் தட்டுப்பாடு

## 5 இலட்சம்பேரை அனுமதிக்க முடிவு

(மலேசியா)

மலேசியாவில் வேலை செய்ய ஆட்கள் இன்றி பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. முறையான குடி யேற்ற உரிமைகளுடன் கூடிய ஆவ ணங்கள் உள்ள பல்வேறு தொழில் களை அறிந்த 5 லட்சம் பேரை அனு மதிக்க மலேசிய அரசு அனுமதிகக முடிவு செய்திருக்கிறது,

மலேசியாவில் வேலைக்கு ஆட் கள் கிடைக்காமல் பெரும் தவிப்பு ஏறபட்டதனால் அவசரமாக மலேசிய அமைச்சரவை கூடி 5 இலட்சம் பேரை வெளிநாடுகளில் இருந்து முறை யான விசா ஆவணங்களுடன் அனு மதிக்க முடிவு செய்திருக்கிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு வரை பொதுமன்னிப்பு என்ற திட்டத்தில் 4 இலடசம் பேரை மலே சியா வெளியேற்றியது. அதில் இந் தியர்களும அடங்குவர். பொதுமன்னிப் புத் திட்டம் வழங்கிய பின் அரசு நடத்திய கணக்கெடுப்பில் முறையான விசா மற்றும ஆவணங்கள் இல் லாமல் சட்டவிரோதமாக அனுமதித் ததாக மலேசியாவைச் சேர்ந்த 48 பேர் மீது வழக்குத் தொடர்ந்திருக் கிறது.

சட்டவிரோதமாகத் தங்கியவர் கள் என்ற புகாரில் இவர்களை அனுப்பியதில் மலேசியாவில் பெரும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. தொழி லாளர்கள் இல்லாமல் தவிக்கும் நிலை உருவாகியிருக்கிறது. மலே சிய துணை பிரதமர் நஜீப்துன் தலைமையில் நடந்த அமைச்சர வைக் கூட்டத்தில் அடுத்த 6 மாதங் களுககுள் 20 இலட்சம் பேர் தேவை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு துறைக்கும் எத்தனை பேர் தேவை என்று கணக்கெடுக்க தொழில்நுட்பக் கமிட்டி அமைக்க அரசு முடிவு செய்திருக்கிறது. குறிப் பாக தோட்டத் தொழில், ரப்பர்காடு கள் உற்பத்தித் தொழில்களில் ஆள் பற்றாக்குறை ஏராளம்.

சீனாவில் இருந்து வருபவர் களை அனுமதிப்பதைவிட இந்தோ னேஷியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து ஒரு இலட்சம் பேரை அனும திக்கலாம் என்று முன்பு முடிவு செய் யப்பட்டது.

தற்போது இந்தியா, நேபாளம், வியட்நாம் ஆகிய நாடுகளில் இருந் தும் தொழிலாளாகளை அனுமதிக்க லாம் என்று முடிவு செய்யப்பட்டிருக் கிறது. ஏற்கனவே சட்டவிரோத மாக நுழைந்தவர்கள் என்று வெளி யேற்றப்பட்டவர்கள் முறையான ஆவ ணங்களுடன் வந்தால் அனுமதிக்க லாம் என்றும் புதிதாக முடிவு செய் யப்பட்டிருக்கிறது. (து)



இங்கிலாந்தில் சார்லஸ் திருமண வாழ்த்துப் பொருட் களின் விற்பனை அமோக மாகவுள்ளது.

இங்கிலாந்து இள வரசர் சார்லஸ் தனது நீண்ட நாள் காதலி கமீலா பார்க் கரைத் திருமணம் செய்து கொள்ளத் திட்டமிட்டுள் ளார். அவர்களது திருமணம் வரும் 8ஆம் திகதி நடை பெறுவதாக இருந்தது. ஆனால் போப்பாண்டவரின் இறுதிச் சடங்கை முன் னிட்டு திருமண திகதி வரும் 9ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் சார்ஸின் திருமணம் தொடர்பான வாழ்த்துப் பொருட்கள் இங்கிலாந்தில் அமோக விற்பனையாகி வருகின்றன.

WORLD NEWS உலக தரிசனம்

# போப்புக்கு இறுதி அஞ்சலி செலுத்த

# மணிக்கணக்கில் காத்திருக்கும் மக்கள்

நாளை நல்லடக்கம் செய்யப் படவுள்ள போப்பின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்த பல நாடுகளில் இருந்தும் மக்கள் ஆயிரக்கணக்கில் வந்துக்கொண்டிருக்கின்றனர்.

இரவில் கடும் குளிரிலும் நீண்ட வரிசையில் மணிக்கணக்கில் நின்று அஞ்சலி செலுத்துகின்றனர்.

வத்திக்கானில் கடந்த சனிக்கிழமை இரவு மறைந்த போப்பின் உடல், செயின்ட் பீட்டர் சேர்சசில் நேற்று முன தினம் இரவு முதல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இத்தாலி மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் நீண்ட வரிசையில் நின்று போப் புக்கு அஞ்சலி செலுத்தி வருகின்ற னர். பல ஆயிரம் பேர் பிள்ளைக ளுடன் வந்துள்ளனர். இரவில் கடும் குளிர் நிலவியபோதிலும் மக்கள் அதைத் தாங்கிக்கொண்டு வரிசை யில் காத்திருக்கின்றனர்.

செயின்ட் பீட்டர் சேர்ச் வளாகத் தில் போப்புகள் அடக்கம் செய்யப் பட்ட இடத்தில் போப் இரண்டாம் ஜோன்பாலின் உடலும் நாளை வெள் ளிக்கிழமை அடக்கம் செய்யப்பட் வுள்ளது.

போப்பின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள ஆயிரக்கணக்கான மக் கள் ரோமில் சிறிய முகாம்கள் அமை த்து தங்கியுள்ளனர்.

தற்போதைய நிலவரப்படி வத்திக்கானில் ஒரு லட்சம் மக்கள் அஞ்சலிக்காக குவிந்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை 20 லட்சம் மக்கள் குவிவார்கள் எனறு எதிர்பார்க கப்படுகிறது. அமெரிக்க அதிபா புஷ உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட நாடு களின் தலைவர்களும் பங்கேற்க உள்ளனர். எனவே பாதுகாப்பு ஏற் பாடுகளில் தீவிர கவனம் செலுத் தப்படுகிறது.

போப்புக்கு அஞ்சலி செலுத்த லட்சம் மக்கள் குவிந்துள்ளதால் வத்திக்கானில் காலி தண்ணீர் போத் தல்கள் குவியல் குவியலாக குவிந் துள்ளன. குப்பை கூளங்களும் அதிக மாக உள்ளன. மணிக்கணக்கில் நிற்கும் மக்களுகக்கு உணவுப் பிரச்சி னையும் ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் தன்னா ர்வத் தொண்டு நிறுவனங்கள் ரொட்டி மற்றும் பழங்கள் வழங்கி வருகின்றன. வரிசையில் நீண்ட நேரம் நின்றதால் 40க்கும் மேற்பட்டோர் மயங்கி விழுந் தனர். (து)

# பாலியல் சாமியார் பிரேமானந்தரின்

# இரட்டை ஆயுள் தண்டனை ஊர்ஜிதம்

பாலியல் பலாத்காரம் மற்றும் மோசடி வழக்குகளில் இரட்டை ஆயுள தண்டனை விதிக்கப்பட்ட பிரேமா னந்தசாமியின் தண்டனையை உச்ச நீதிமன்றம் நேற்றுமுன்தினம் ஊர் ஜிதம் செய்தது. இதனால் அவர் 2022ஆம் ஆண்டுவரை அவர் சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும்.

பிரேமானந்தாவின் சிறைத்தண்ட னைக் காலத்தை மத்திய மாநில அரசுகள் எந்தவிதத்திலும் குறைக்கக கூடாது என்றும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருச்சியை அடுத்த பாத்திமா நகரில் ஆச்சிரமம் அமைத்து செயற் பட்டு வந்தவர் பிரேமானந்தர். 13 பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்தது, ரவி என்ற உதவியாளரைக் கொலை செய்தது உள்ளிட்ட குற் றச்சாட்டுக்களின் பேரில் கடந்த 1994 ஆம் ஆண்டு அவர் கைது செய்யப பட்டார்.

பிரேமானந்தா வழக்கை விசா ரித்த புதுக்கோட்டை நீதிமன்றம் அவருக்கு இரட்டை ஆயுள் தண்டனை அதாவது 28 ஆண்டுகாலச் சிறைத் தண்டனை வழங்கியது.

சென்னை உயர் நீதிமன்றமும் தண் டணையை உறுதி செய்தது. இதையடுத்து கடலூர் மத்திய சிறையில் அடைக் கப்பட்டுள்ள பிரேமானந்தா இரட்டை ஆயுள் தண்டணையை எதிர்தது உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். உச்ச நீதிமன்றமும் பிரே மானந்தாவுக்கு விதிக்கப்படட இர ட்டை ஆயுள் தண்டனையை உறுதி செய்து நேற்றுமுன்தினம் தீர்ப்ப ளித்தது.

புதுக்கோட்டை நீதிமன்றமும் சென்னை உயர் நீதிமன்றமும் அவருக்கு விதித்த தண்டனையால் எவ்வித தவறும் இல்லையென்பதால் உச்ச நீதிமன்றம் இதில் தலையிட விரும்ப வில்லையென்று நீதிபதிகள் தெரி வித்தனர். இதனால் 1994இல் தண்டனை விதிக்கப்பட்ட பிரேமானந்தா 2022ஆம ஆண்டுவரை சிறைத்தண்டனை அனு பவிக்க வேண்டும். (து)



கோடை வெயில் துவங்கி கொளுத்திய நிலையில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக மழைபெய்து வருகிறது. வேர்வையில் நனைந்த மக்கள் மழையில் நனைந்து ஆனந்தமடைகின்றனர்.வானில் திரண்டுள்ள கருமேகங்கள்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் கையளிக்குமாறு சர்வதேசம் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## யாழ்.நல்லூர் பொது அமைப்புக்களின் ஒன்றியம் பகிரங்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சிங்கள மக்களோடு ஒன்றுசேர்ந்து வாழ்வதற்காகத் தமிழ் மக்களாகிய நாம் பல தடவை பல விட்டுக்கொடுப்புக்களைச் செய்துள்ளதுடன் அத்தகைய விட்டுக்கொடுப்புக்களைத் தொடர்ந்தும் செய்தவண்ணமுள்ளோம்.**

**ஸ்ரீலங்கா அரசாங்கமும், தேசவிரோத சக்திகளும், இராணுவமும் இணைந்து மேற்கொள்ளும் அடக்குமுறைக்குட்பட்ட, அராஜகமான அனுகுமுறைகளையும் சகித்துக் கொண்டு நாம் சமாதானத்தையும், போரற்ற சூழலையும் பாதுகாத்து வருகின்றோம். இதனை உணர்ந்து, சமாதானப் பேச்சுக்களுக்கு உரிய சந்தர்ப்பதை ஏற்படுத்துவதோடு இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப்புலிகளிடம் கையளிக்கவேண்டும் என்றும் தமிழ் மக்களது இயல்புவாழ்க்கையை உருவாக்க சந்தர்ப்பம் அளிப்பதுடன் மீளக்குடியமர்வு உட்பட சுனாமிக்கான பொதுக்கட்டமைப்பை வழங்கவும், அரசியல் படுகொலைகளை நிறுத்தக்கோரியும் சர்வதேச சமூகம் ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என யாழ்.நல்லூர் பொது அமைப்புக்களின் ஒன்றியம் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளது.**

நேற்றைய தினம் நல்லூரில் நடாதத்தப்பட்ட பேரணியின் இறுதியில இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகப் பிரதி அதிகாரி வொய்ற்ரோ லெய்ரோனெனிடம் யாழ். நல்லூர் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினால் மகஜரொன்று கையளிக்கப்பட்டது.

கையளிக்கப்பட்ட மேற்படி மகஜரிலேயே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இம் மகஜரின் விபரம் வருமாறு,

மிக நீண்டகாலமாக இயல்பான வாழ்க்கையை இழந்து அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் துயரப்படும் மக்களை மீளக் குடியேற்றவேண்டும். அதற்குத் தடையாக விளங்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினை வாபஸ் பெறுவதோடு மக்கள குடியிருப்புக்களில் இராணுவம் மேறகொள்ளும் கொடுமையான அணுகுமுறைகளை நிறுததவேண்டும். பாலியல் வல்லுறவுகளையும், தமிழ் மககள் மீதான தாக்குதல்களையும் ஜனநாயக வழிமுறையிலான போராட்டங்கள் மீது தாக்குதல் நிகழ்த்துவதையும் இராணுவம் உடனடியாக நிறுத்த வேண்டும்.

பெண்கள், சிறுவர்கள் என்ற வேறுபாடின்றி தமிழ்மக்கள் மீதான அடக்குமுறைகளை ஸ்ரீலங்கா இராணுவம் நிறுத்தவேண்டும். நிகழ்த்தபடுகின்ற துயரமான சிறைச்சாலைக்குள் நாம் வாழுகின்றோம். பாடசாலைச் சிறுவர்கள் மீதும், சாதாரண பொதுமக்கள் மீதும் இராணுவம் நிகழ்த்தும் விபத்து என்ற பெயரிலான தாக்குதல்களைத் திட்டமிட்ட படுகொலைகளாகவே தமிழ்மக்கள் கருதுகின்றனர். எனவே, இதனைச் சர்வதேச சமூகம் கவனத்தில் எடுத்து நிறுத்துவதற்கான அழுத்தத்தை ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு ஏற்படுத்த வேண்டும்.

சிறியவர், முதியவர் என்ற வேறுபாடின்றி ஸ்ரீலங்காப் படைகள் தமிழ் மக்கள் மீது நிகழ்த்தும் பாலியல் துன்புறுத்தல்கள் ஏற்றுக் கொள்ளப்படமுடியாதவை. இது மனித உரிமை, பெண்கள் உரிமை என்பவற்றை மீறுவதாகவே தென்படுகிறது. எந்தச் சர்வதேச விதிமுறைகளின் கீழும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவையாக இவை விளங்குகின்றன.

சுனாமி என்ற இயற்கையான அழிவுகளை மீளமைப்பதற்கான பொதுக்கட்டமைப்பைச் ஸ்ரீலங்கா அரசாங்கம் உடனடியாக உருவாக்க வேண்டும். விடுதலைப்புலிகளின் அணுகுமுறைக்குட்பட்ட வடக்கு -கிழககுப் பிரதேசத்தை மீள நிமிர்வடையச் செய்வதற்கான ஏற்பாடுகளைத் தமிழ்மக்களாகிய எமக்கு வழங்குவதற்குப் பொருத்தமானதாக அமைநதிருப்பது பொதுக்கட்டமைப்பாகும். அந்தவகையில், உடனடியாகப் பொதுக கட்டமைப்புக்கு இணங்குவதோடு சர்வதேச சமூகம் வழங்கிய நிதி உதவிகளையும், தமிழர்களுக்கான பங்கினையும் வழங்க முன்வரவேண்டும்.

மீண்டும் மீண்டும் தமிழர்களை ஏமாற்றுமாயின் ஆபத்தான விளைவுகளை அரசாங்கம் சந்திக்க நேரிடும். அதிகமான இழப்பீடுகளையும், நெருக்கடிகளையும் சந்தித்த தமிழ் மக்களின் நிலையைப் பொதுக்கட்டமைப்பு அரசாங்கம் மாற்றியமைகக உதவவேண்டும்.

வடக்கு - கிழக்குக்கான நிர்வாகப் பொறிமுறையை நிர்ணயிக்கவேண்டுமாயின் ஸ்ரீலங்கா அரசாங்கம் இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கவேண்டும்.

விடுதலைப்புலிகளின் நிர்வாக இயந்திரத்தின் சிறப்பினைப் பற்றி சர்வதேச சமூகமும், ஸ்ரீலங்கா அமைச்சரவையும் குறிப்பிடும்போது நிர்வாக இயந்திரம் முழுவதையும் அவர்களிடம் ஒப்படைப்பதே பொருத்தமானது. எந்த நிபந்தனையும் இன்றி இடைக்கால நிர்வாகத்தினை விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கவேண்டுமெனக் கோருகின்றோம்.

தமிழ் மக்களின் துயரிலும், நெருக்கடியிலும் இணைந்து விடுதலை புலிகளே வடக்கு - கிழக்கின் நிர்வாகத்தினை மேற்கொள்ளப் பொருத்தமானவர்கள். எனவே அவர்களிடம் நிர்வாக அமைப்பை ஒப்படைக்குமாறு வேண்டுகிறோம்.

ஸ்ரீலங்கா அரசாங்கமும், ஸ்ரீலங்கா இராணுவமும் தமிழ்த் தேசவிரோத சக்திகளை இணைத்துக்கொண்டு விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள மீதும், விடுதலைப்புலிகளின் அரசியல் தலைவர்கள் மீதும் நிகழ்த்தும் நிழல் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும. அத்தகைய படுகொலைகள் விடுதலைப்புலிகளைச் சீண்டுவதுடன் போர் நிறுத்தத்திற்கு ஆபத்தினை விளைவிக்கும் தீயசக்திகளின்வேலையாகவே தென்படுகின்றது. இதனை உடன் நிறுத்த அரசாங்கம் தவறுமாயின் இலங்கையின அரசியல் வரலாற்றில் அதிகமான பாதிப்புக்களைச் சந்திக்கவேண்டியேற்படும்.

எனவே, தமிழ் மக்கள் மீண்டும் மீண்டும் விட்டுக்கொடுப்புக்களையும், அகிம்சைப் போராட்டத்தையும் நடாததிவருகின்றனர். சமாதானமும் ஐககியமும் நிலைத்திருக்கவேண்டும் எனபதோடு போரற்ற தீர்வொன்றைத் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் அணுகுமுறையை சர்வதேச சமூகம் புரிந்திருக்கும்.

சுனாமி மீள் கட்டுமானத்தில் வடக்குக் கிழக்கை அரசு எந்தவிதமான முன்னெடுப்புக்குள்ளும் இணைத்துக கொள்ள விரும்பவில்லை என்பதே அரசின் இனவாதப் போக்கை உணர்த்தப் போதுமானது.

சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து தமிழ் மக்களின் இயல்புவாழ்வையும், இடைக்கால நிர்வாக அமைப்பையும், மீளக்குடியமர்வுக்கான வாய்ப்பையும், பொதுக்கட்டமைப்புக்கான சூழலையும் ஏற்படுத்த உதவ வேண்டுமெனக் கோருகின்றோம் எனவும் அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம் மகஜரின் பிரதிகள், அனைத்து வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ந-19)

# இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கு நிவாரணமளிக்க ஆணைக்குழு

(புத்தளம்)

வடபகுதி முஸ்லிம்களுக்கு இடபெயர்வால் ஏற்பட்ட இழப்புகளுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் வகையில் ஆணைக்குழுவொன்றை நியமிக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற அரசுக்கு ஆதரவளிக்கும் முஸ்லிம் கடசிப் பிரதிநிதிகளுடன் நடத்தப்படட கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மேல் மகாகாண ஆளுநர் அலவி மௌலானா, அமைச்சர்கள் பேரியல் அஷ்ரப், ஏ.எச்.எம்.பௌசி, ஏ.எல்.எம்.அதாவுல்லா, றிசாட் பதியுதீன, நஜீப் அப்துல் மஜித் மற்றும் பிரதி அமைச்சர்கள் ஹனசன் பைலா, எம்.ஐ.அன்வர் ஆகியோர் இக் கலநதுரையாடலில் கலந்துகொண்டனர்.

கடந்த 15 வருடகாலமாக வடமாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த நிலையில் புத்தளம், குருநாகல், அனுராதபுரம் உள்ளிட்ட பல்வேறு மாவடடங்களில் வாழ்ந்துவரும் முஸ்லிம்கள் தமது தாயகத்தில் மீளக்குடியமர ஆர்வம் கொண்டுள்ள நிலையில் இழந்துபோன சொத்துக்களுக்கான நட்டஈடுகளைப் பெற்றுக்கொடுகக தாம் அரசாங்கததை வற்புறுத்துவதாக புனர்வாழ்வு வன்னி மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் றிசாட் பதியுதீன் வலியுறுத்திக் கூறினார்.

இவற்றைத் தமது கவனத்தில் கொண்ட ஜனாதிபதி இவ்விடயம் சம்பந்தமாக ஆணைக்குழுவொன்றை நியமித்து தகுந்த நடவடிக்கை எடுப்பதாகத் தம்மைச் சந்தித்த அரசுக்கு ஆதரவளிக்கும் முஸ்லிம் கட்சிப் பிரதிநிதிகளுக்கு உறுதியளித்துள்ளார். (து-15)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான

# முதலாம்கட்ட நிவாரணப் பணிகள் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளன

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கையின் முதலாவது க்கட்டப் பணிகள் வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டிருப்பதாக நகர அபிவிருத்தி நீர் வழங்கல் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா தெரிவித்திருக்கிறார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அவர் உரையாற்றும் போது, தற்சமயம் தற்காலிக வீடுகளை அமைக்கும் பணிகள் இடம் பெறுகின்றன. இரண்டாவது கட்டமாக 60ஆயிரம் வீடுகளைக் கட்டுவதற்கான திட்டங்கள் ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டிய கடப்பாடு அரசாங்கத்துககு உள்ளதாகவும் தெரிவித்தார்.

பிரதியமைச்சர் விமல்ரத்தின நாயக்கா உரையாற்றும்போது,

பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவைபடும் அவசிய உதவிகளை அரசாங்கம ஏற்கனவே வழங்கியுள்ளது என்று தெரிவித்தார். (7-8)







**இலங்கை வங்கியின் யாழ். மேற்தரக் கிளையினால் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் கடந்த 4ஆம் திகதி சிறுவர் சேமிப்பு பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.**

**இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் உரையாற்றுவதையும், மேடையில் வங்கி அதிகாரிகள் மற்றும் பாடசாலையின் பிரதி அதிபர் ஆகியோரையும் இந்நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.**

(படங்கள்: ஞா.ஜங்கரன்)

# வறுமைக்கோட்டின் கீழுள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நிவாரணம் நிறுத்தப்பட்டதால் நிர்க்கதியான நிலையில்!

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டததில் மீளகுடியமர்ந்த குடும்பங்களுக்கு அரசினால் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வந்த இலவச நிவாரணப் பொருட்கள் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்கள் நிர்க்கதிநிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

இதனால் இக் குடும்பங்களில் இருக்கின்ற சிறுவர்களும் முதியோரும் தமது அன்றாட உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

மீளக்குடியேறிய நிலையில அரசினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் மீள்குடியமர்வுக் கொடுப்பனவாகிய 25 ஆயிரம் ருபாவைப பெற்றுப் பதினைந்து மாதங்கள் கடந்துவிட்ட ஆயிரக்கணக்கான குடுமபங்களே இவ்விதம் பாதிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய குடும்பங்கள் அனைத்துமே வறுமைக்கோட்டின் கீழ் உள்ளமையினால் அவற்றுககு எத்தகைய நிரந்தர வருமானமும் அற்ற நிலையிலேயே வாழ்ந்து வருகின்றன. அத்துடன், இவ்வாறான குடும்பங்களின் தலைவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களும் இல்லாமல் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில், அரசினால் மாதாந்தம் வழங்கப்பட்டு வந்த இலவச நிவாரணப் பொருட்களை நம்பி வாழ்ந்த குடும்பங்கள் தற்போது போதிய உணவு இன்றிப் பெரும் கஷ்டங்களை அனுபவிதது வருகின்றனர்.

இதேசமயம், இத்தகைய குடும்பங்களில் இருக்கின்ற சிறுவர்கள், பெண்கள் மற்றும் முதியவர்களுக்கு வேண்டிய உணவினை வழங்கமுடியாத நிலையில் குடுமபத் தலைவர்கள் இருந்து வருகின்றனர். இதனால், இத்தகைய குடும்பங்களில் உள்ள பாடசாலைச் சிறுவர்களில் பெரும்பான்மையினர் காலைநேர உணவின்றியே பாடசாலைக்குச் செல்வதாகத் தெரியவருகின்றது.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் தொடர்ச்சியாக நிலவுகின்ற தொழில் வாய்ப்பின்மையினால் வறுமைகோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்கள் தமது நாளாந்த வருமானத்தைக்கூடப் பெறமுடியாமல் இருந்து வருகின்றன. இதனால் குடும்பப் பெண்கள் தமது பிள்ளைகளைப் பராமரிக்கமுடியாமல் பெரும நடைமுறைக்கஷ்டஙகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதே சமயம் மனிதநேய அடிப்படையில் இத்தகைய குடும்பங்களுக்கு இலவச நிவாரணப் பொருட்களை வழங்கும்படி அமைபபுக்கள் பலரும் அரசிற்கு அழுத்தம் கொடுத்திருந்தபோதிலும் கூட, எத்தகைய மாற்றமும் இது வரை ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(ற-16)

## சங்காபிஷேகம்

(பொன்னாலை)

சித்தன்கேணி - நாகதன்னி அம்பாள் ஆலய வருடாந்த பங்குனித் திங்கள் அஷ்டோத்திர சங்காபிஷேகம் எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது. (க-49)

## உதைபந்தாட்ட போட்டி

(பொன்னாலை)

அரியாலை - சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு நடாத்தப்படும் உதைபந்தாட்டக் கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளன.

(க-49,








யாழப்பாணம் விஞ்ஞான சங்கத்தின் 13ஆவது வருடாந்த அமர்வுகள் நேற்றைய தினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றன. இந்நிகழ்வில் பேராசிரியர் எஸ்.சிவஞானசுந்தரம் (நந்தி) உரையாற்றுவதையும், சுகாதார ஆய்வாளர் கலாநிதி பி.லுக் உமா, சுற்றுச் சூழல் ஆய்வாளர் கலாநிதி சமரக்கோன், பொருளாதார ஆய்வாளர் கலாநிதி செல்வி எஸ்.அருளானந்தம், கலாசார ஆய்வாளர் கலாநிதி திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும், விஞ்ஞானபீட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

படங்கள்: ஞா.ஐங்கரன்


# 'கூட்டுறவுக் கருவூலங்கள்' நூல் வெளியீட்டு விழா


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை வெளியிடும் முன்னாள் பிராந்திய கூட்டுறவுக் கல்லூரி அதிபர் இ.சுப்பிரமணியத்தின் கூட்டுறவுக் கருவூலங்கள் நூல் வெளியட்டுவிழா எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், வட - கிழக்கு மாகாண கூட்டுறவுச்சங்கப் பதிவாளரும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான இ.இளங்கோவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் க.தேவராசா, நூல் வெளியீட்டுரையை நிகழ்த்தவுள்ளார். நூலின் முதற் பிரதியை முதுபெரும் கூட்டுறவாளர் க.இ.குமாரசுவாமி பெற்றுக்கொள்ளவுள்ளதுடன் நூல் ஆய்வுரையை வட-கிழக்கு மாகாண முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், சண்டிலிப்பாய் பிரதே செயலாளருமான எஸ்.சுப்பிரமணிய சர்மா நிகழ்த்தவுள்ளார். (ற)





சுன்னாகம் சிறி கதிரமலைச் சிவன் ஆலயத்தின் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு அக்கோயிலில் புதிதாக அமைக்கப்பட்ட 63 நாயன்மார்களது உருவச்சிலைகளும் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பிரதிஷ்டை செய்யப்படவுள்ளன. பிரதிஷ்டை செய்யப் படவுள்ள 63நாயன்மார்களது உருவச்சிலைகளும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இருந்து யாழ்.நகர் காங்கேசன் துறை வீதியூடாக நேற்றையதினம் எடுத்துச்செல்லப்பட்டன. இவ்வாறு எடுத்துச்செல்லப்பட்ட இந்நாயன்மார்களது உருவச்சிலைகளுக்கு வீதிகளில் மக்கள் கூடி நின்று ஆராதனை செய்தனர் இந்நிகழவுக் காட்சிகளைப் படங்களில் காணலாம்.

படங்கள்: ஞா.ஐங்கரன்

# யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கத்தின் 13ஆவது வருடாந்த அமர்வு நேற்று ஆரம்பம்

## பேராசிரியர் எரிக் கருணாநாயக்கவுக்கு தங்க விருது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வஞ்ஞான சங்கத்தின் 13ஆவது வருடாந்த அமர்வுகளின் ஆரம்ப நிகழ்வுகள் நேற்றைய தினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் யாழ்.விஞ்ஞான சங்கத்தினால் வருடாவருடம் சிறந்த விஞ்ஞான ஆய்வாளருக்கு வழங்கப்படும் தங்க விருது இம்முறை உயிர் இரசாயனவியல், உயிர் தொழிலநுட்பவியல் ஆய்வாளரான பேராசிரியர் எரிக் கருணாநாயக்கவுக்கு வழங்கப்பட்டது.

பேராசிரியர் கந்தையா பாலசுப்பிரமணியத்தின் ஞாபகார்த்தமாக இவ்விருது யாழ்.விஞ்ஞான சங்கத்தின் தலைவரும் யாழ்.பலகலைக்கழக விவசாய பீடாதிபதியுமான பேராசிரியர் இராசதுரையால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

மேலும், இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், பேராசிரியர் கந்தையா பாலசுப்பிரமணியம், விஞ்ஞானசங்கத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல், பேராசிரியர், எஸ்.சிவஞானசுந்தரம் (நந்தி), சுற்றுச்சூழல் ஆய்வாளர் கலாநிதி சமரக்கோன், சுகாதார ஆய்வாளர் கலாநிதி பி.லுக்உமா, பொருளாதார ஆய்வாளர் கலாநிதி செல்வி எஸ்.அருளானந்தம், கலாசார ஆய்வாளர் கலாநிதி கோகிலா மகேந்திரன் யாழ்.விஞ்ஞானச் சங்கத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி சு.செந்தூரன் ஆகியோர் உட்பட விரிவுரையாளர்களும், விஞ்ஞான பட மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

யாழ.விஞ்ஞான சங்கத்தின் 13 ஆவது அமர்வு தொடர்நது இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

யாழ்.விஞ்ஞானச் சங்கத்தினால விருது வழங்கிக்கௌரவிக்கப்பட்ட பேராசிரியர் எரிக் கருணாநாயக்க ஜனாதிபதியால் வழங்கப்படும் சிறந்த ஆராய்ச்சிக்கான விருதை 1999, 2000, 2001ஆம் ஆண்டுகளில் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவர் தற்போது இலங்கையில் மார்பகப் புற்றுநோயாளர்களின் பரம்பரை அலகுகளில் ஏற்படும் விவகாரங்கள் பற்றி ஆய்வு செய்து வருகின்றார். (ற-19)

# பீப்பில்ஸ் லீசிங் கம்பனியின் புதிய கிளை யாழில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் முழு உரித்துடைய பீப்பில்ஸ் லீசிங் கம்பனி லிமிட்டட்டின் யாழ்ப்பாணத்திற்கான புதிய கிளை இல. 82,கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் எதிர்வரும 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 11.00மணிக்கு மக்கள் வங்கியின் பொது முகாமையாளர் ரி.கருணாசேனவால் வைபவரீதியாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் அசோக் லேலண்ட் கம்பினியின் பொது முகாமையாளரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். அத்துடன் பீப்பிலஸ் லீசிங் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரி உட்பட மற்றும் பல ஊழியர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்மூலம் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் மக்கள் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு மட்டும மட்டுப்படுத்தப்பட்டிருந்த வாகனங்களுக்கான லீசிங் வசதி மற்றும் வாடகைக் கொள்வனவு வசதி என்பன மக்கள் வங்கியின் வாடிக்கையாளர் அல்லாதோர்களுக்கும் விரிபுபடுத்தப்படவுள்ளன.

இந்த அரிய சந்தர்ப்பதை அனைவரும் பயன்படுத்திக்கொள்ளுமாறு மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா தெரிவித்துள்ளார். (ற)

## வருடாந்த மஹோற்சவம்

(காரைநகர்)

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று புதன்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து பத்துத் தினங்கள இடம்பெறும் இவ் உற்சவத்தில் 14ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 15ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (7-246)

# மீள்பார்வை

## பிரியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

### (தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 30



**அத்தியாயம் X**

எல்லாக் குழுக்களுக்கும் ஏற்புடையனவான பொது விதிகள் 130 மற்றும் 130 ஏ எனும் நிலையியற் கட்டளைகளில் காணப்படுகின்றன. குழுக்களின் அறிக்கைகள் அந்தந்தக் குழுவின் தவிசாளரால் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன. உப குழுக்களை நியமிப்பதற்கும் அவற்றுக்கு விசேட பரிசீலனைக்காகக் குறிப்பான விடயங்களை ஒப்படைப்பதற்கும் குழுக்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்துக்கு வெளியேயும் கூடுவதற்குக் குழுக்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள போதிலும் இற்றைவரை அத்தகைய ஒரு நிகழ்வும் பதிவுசெய்யப்படவில்லை. குழுக்கள் சபாநாயகரின் அல்லது தவிசாளரின் அங்கீகாரத்துக்கமைய அதன் கூட்டங்களில் கலந்து கொள்வதற்குப் புறத்தோரை அனுமதிக்கலாம். அவ்வாறே அவை புறத்தோரை விலக்கியும் வைக்கலாம். எவ்வாறாயினும் குழுவொன்று கலந்தாலோசிக்கின்ற போது இன்றியமையாதவாறு புறத்தோர், சாட்சிகள் மற்றும் ஏனையோர் விலக்கப்படுகின்றனர். எல்லாக் குழுக்களும் இயன்றவரை சபையிலுள்ள கட்சிகளின் ஆக்க அமைவைப் பிரதிபலிக்கவேண்டுமென்பது மரபின் மூலம் நிலைநாட்டப்பட்டுள்ளது.

குழுவொன்று அதற்களிக்கப்பட்ட ஆணையின் வரையறைக்குட்பட்ட விடயங்கள் பற்றி ஆராய்ந்து அறிக்கையிட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த காலங்களில் குழுக்கள். கருத்தொருமைப்பாடு சாத்தியமல்லாதபோது. சிறுபான்மை அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளன. ஒரு குழுவின் தவிசாளரின் பங்கு சபாநாயகரின் பங்கை ஒத்ததென்பதுடன் ஒழுங்கைப் பேணுவதில் சபாநாயகருக்குள்ள தத்துவங்கள்அவருக்கும் உண்டு. குழுவைக் கூட்டுமாறு பணிப்புகள் வழங்குவதும் தேவையான கூட்ட நடப்பெண்ணில்லாது. குழுக்கூட்டங்கள் நடத்தப்படாதிருத்தலை உறுதிப்படுத்துவதும் தவிசாளரின் கடமையாகும்.

முழுப்பாராளுமன்றக் குழு சபையின் தீர்மானமொன்றின் மூலம் அமைக்கப்படுகின்றது. தெரிவுக் குழுக்களைச்.சபாநாயகர் நியமிக்கின்ற அதேவேளையில் ஏனைய குழுக்கள் தெரிவுக் குழுவினால் நியமிக்கப்படுகின்றன. குறித்த சில குழுக்களின் உறுப்பாண்மை நிலையியற் கட்டளைகளில் விதித்துரைக்கப்பட்டுள்ளது.

சில குழுக்களின் விடயத்தில் யார் தவிசாளராகச் செயற்பட வேண்டுமென நிலையியற் கட்டளைகள் விதித்துரைக்கின்றன. ஏனையவற்றில்,எ-கா. அரசாங்கக் கணக்குக் குழுவில், தவிசாளரைத் தெரிவு செய்யும் உரிமை குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. தெரிவுக்குழுவொன்றின் தவிசாளர் சபாநாயகரால் நியமிக்கப்படுகின்றார். விசேட நோக்கங்களுக்கான குழுக்களில் அந்தந்தக் குழுதானே அதன் தவிசாளரைத் தெரிவு செய்கின்றது. (நிலையியற் கட்டளை 129) சட்டமூலங்கள் மீதான நிலையியற் குழுக்களுக்கு வழமையாகப் பிரதிச் சபாநாயகர் அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை வகிக்கின்றார். அவர்கள் இல்லாதவிடத்துக் குழு அதன் தவிசாளரைத் தெரிவுசெய்கின்றது. இலங்கையில் குழுக்களுக்கு அரசாங்க உறுப்பினர்கள் தலைமைதாங்கும் போக்குக் காணப்படுகின்றது. குழுக்களின் ஆக்க அமைவு, கடமைகள், பதவிக்காலம், கூட்ட நடப்பெண், குழுக்களில் அலுவலை நடத்துவதற்கான நடைமுறை என்பவை நிலையியற் கட்டளைகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன. எனினும் சபை பல்வேறு சந்தர்ப்பங்களில் ஓர் ஒழுங்கற்ற நடைமுறையில் குழுக்களின் ஆக்க அமைவை வேறுபடுத்துவதற்கான தீர்மானங்களை ஏற்றுக் கொண்டுள்ளது. குழுக்களின் ஆக்க அமைவை மாற்ற வேண்டுமாயின் அதற்கிணங்க நிலையியற் கட்டளைகளைத் திருத்துதலே சரியான நடைமுறையாகும். இவ்விடயத்தில் சபை எந்த அளவுக்கு நிலையியற் கட்டளைகளிலிருந்து விலகியுள்ளதென்பதை பின்வரும் அட்டவணையிலிருந்து அவதானிக்கலாம்.

**குழுக்களின் ஆக்க அமைவு**

| குழு | நி.க. இல. | நிலையியற் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட எண்ணிக்கை | 2002.02.05 இல் பாராளுமன்றத் தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆக்க அமைவு | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | பதவி வழி | அரச கட்சி | எதிர்க் கட்சி | மொத்தம் |
| நிலையியற் குழு ஏ | 116 | தெரிவுக் குழுவால் தீர்மானிக்கப்படுவதற்கு | | 12 | 8 | 20 |
| நிலையியற் குழு பீ | 120 | | | | | |
| சபைக் குழு | 122 | சபாநாயகரும் வேறு 9 உறுப்பினர்களும் | 1 | 8 | 7 | 16 |
| நிலையியற் கட்டளைகள் குழு | 123 | சபா.பி.சபா.கு.பி.த.வேறு 6 உறுப்பினர்கள் | 3 | 9 | 8 | 20 |
| அரசாங்கக் கணக்குக் குழு | 125 | 12 | | 8 | 7 | 15 |
| அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் குழு | 126 | 12 | | 8 | 7 | 15 |
| சிறப்புரிமைகள் குழு | 127 | 10 | | 8 | 6 | 14 |
| பொது மனுக்குழு | 128 | 10 | | 8 | 7 | 15 |
| உயர் பதவிகள் குழு | 128 அ | 12 | | 14 | 12 | 26 |
| ஆலோசனைக் குழுக்கள் | 104 - | 5-12 115 | | 11 | 9 | 20 |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குழுக்களைத் தவிர. பாராளுமன்றப் பணியாளர் தொகுதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பணியாளர் ஆலோசனைக்குழு. பொதுநலவரசுப் பாராளுமன்றச் சங்கம். அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியம். சார்க் பாராளுமன்ற சங்கம் ஆகிய பல்வேறு சர்வதேச பாராளுமன்றச் சங்கங்களின் உள்நாட்டுக்கிளை களின செயற்பாட்டை ஒழுங்குபடுத்துவதற்குத் தாபிக்கப்பட்ட 'நிறைவேற்றுக் குழுக்கள் என்பவையும் உள்ளன.

*முழுப் பாராளுமன்றக் குழு*

முழுப் பாராளுமன்றக் குழு. சட்டமூலங்களின் வாசகங்களை அல்லது ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் அட்டவணைகளை விரிவாக ஆராயும் பொருட்டுச் சபையின் தீர்மானமொன்றின் மூலம் (நிலையியற் கட்டளை 86) உருவாக்கப்படுகின்றது. ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் அட்டவணைகள் முழுப்பாராளுமன்றக் குழுவில் மட்டும் தான் விவாதிக்கப்படலாம்.(நிதி நடைமுறையைப் பார்க்க) சட்ட மூலங்களிலுள்ள வாசகங் களின் விரிவான பரிசீலனை எப்போதும் முழுப்பாராளுமன்றக் குழுவில்தான் செய்யப்படவேண்டுமென் பதில்லை. அவை நிலை யியற குழுக்களுக்கு ஆற்றுப்படுத்தப்படலாம். (சட்ட ஆக்குதலைப் பார்க்க) (தொடரும்)

# மக்களை கஷ்டப்படுத்தும் எண்ணம் தொழிற்சங்க கூட்டமைப்புக்கு இல்லை

(கொழும்பு)

மக்களை கஷ்டத்திற்குள்ளாக்கும் வகையில் திடீர் வேலை நிறுத்தங்களில் குதிக்கும் எண்ணம் தமக்குக் கிடையாது என மின்சார சபையின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நாட்டில் பொருளாதாரப் பின்னடைவை ஏற்படுத்தும் முயற்சிகளில் தாம் ஈடுபடப்போவதில்லை எனவும் கூட்டமைப்பின் இணைப்பாளர் ஆனந்த நிமலரட்ண தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை மாலை நாட்டின் பல பாகங்களிலும் மின் விநியோகம துண்டிக்கப்பட்டமை தொடர்பாக விபரமளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மின்சார சபையை மறுசீரமைக்கும திட்டத்தை தாம் முழுமையாக ஆட்சேபிக்கவில்லை என்றும் தற்போது அரசாங்கம் முன் வைத்துள்ள திட்டங்களில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் அவை தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடாத்த தயாராக இருப்பதாகவும் நிமலரட்ண தெரிவித்தார்.

மின்சார சபையில நிலவும் ஊழல்களை ஒழித்துக்கட்டும் முயற்சிகளில் அரசிறகு பூரண ஒத்துழைப்பை வழங்க தொழிற்சங்கக் கூட்டமைப்பு தயாராகவுள்ளது. மின்சார சபை நட்டம் அடைவதற்கு ஊழல் மோசடிகள் மாத்திரம் காரணம் அல்ல என்றும் அவர் மேலும தெரிவித்தார். (7)

# முக்கிய சில சட்ட மீளமைப்புக்கள் மே மாதம் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதத்தின முதல் வாரத்தில் முக்கிய சில சட்ட மீளமைப்புக்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இதற்கான தீர்மானம் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

மே மாதம் 3ஆம் திகதி குற்றங்கள் சம்பந்தமான சட்ட மீளமைப்பு பிரேரணையும் குற்றங்கள் சம்பந்தமான விசேட கருத்துக்களை உள்ளடக்கிய பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன.

குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஒருவரை 24 மணித்தியாலம் வரை தடுத்து வைப்பது உட்பட மற்றும் பல விடயங்கள் இந்த விசேட பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, எதிர்வரும் மே மாதம் 4ஆம் திகதி வெடிபொருட்கள் சம்பந்தமான மீளமைப்பு பிரேரணையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கபபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரு-4)

# வறுமைக்கோட்டின் கீழுள்ள ஒரு இலட்சம் குடும்பங்களை மீட்க விசேட செயற்றிட்டம்

(கொழும்பு)

வறுமைக்கோட்டின் கீழுள்ள சுமார் ஒரு இலட்சம் குடும்பங்களை வறுமையிலிருந்து மீட்டெடுப்பதற்கு விசேட செயற்றிட்டமொன்று இவ் வருடம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சமுர்த்தி மற்றும் வறுமை ஒழிப்பு அமைச்சர் பவித்திரா வன்னியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

இநத இலக்கினை அடைவதற்காக 24 மணிநேரமும் கடமையாற்றுவதற்கு சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தயாராகவிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மக்களுடன் நெருக்கமாகச் செயற்படும் போது அவர்களது பிரச்சினையினை உரிய முறையில் இனங்காண முடியும். இதறகேற்ற வகையிலேயே இவ் விசேட செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ரு-4)

## கூட்டம்

(பொன்னாலை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்ட கிளையின் அலகு மட்டக் கூட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

கண்டாவளைப் பிரிவின் பிரமந்தனாறு அலகுக்கான பொதுச்சபைக் கூட்டம் பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

அலகுத் தலைவர் பே.சச்சிதானந்தசுந்தரம் தலைமையில் இடம்பெறற இந்நிகழ்வில், மாவட்ட கிளைத் தலைவர் இ.கார்த்திகேசு, செயலாளர் க. கணேஷ் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர். (க-49)

## கரபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்தினால் நடாத்தபபடும் 15,17,19 வயதுகளுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கரபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 15,16,17ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ். வலயக கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (7-19)

## நியமனம்

(அம்பன்)

பருத்துத்துறை பிரதேச சபைக்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் கடந்த 18ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

வேலணை பிரதேச சபையில் கடமையாற்றி வந்த தொழில்நுட்ப உத்தியோகத்தரான நா.சுகந்தன் என்பவரே இவ்வாறு பருத்தித்துறை பிரதேச சபைக்கு நியமிக்கபபட்டுள்ளார். (க-56)

## திருவாசக முற்றோதல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சிவன் ஆலயத்தில எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 10 ஆம் திகதி திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது. (7-21)

## லங்கா சீமெந்து நிறுவன புதிய தலைவராக நவவி

(பொன்னாலை)

லங்கா சீமெந்து நிறுவனத்தின் புதிய தலைவராக எம். எச்.எம். நவவி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வழங்கியுள்ளார்.

கடந்த 30 வருடங்களுக்கும்மேலான அரசியல் அனுபவம் கொண்ட நவவி முன்னாள் முஸ்லிம் சமய கலாசார அமைச்சர்,சுகாதார சமூக சேவைகள் ஆயுர்வேத அமைச்சர் ,முன்னாள் பெருந்தெருக்கள்-போக்குவரத்து-சுற்றாடல் துறை அமைச்சர் பதவிகளை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (7-49)

## வருஷப்பிறப்பு விழா

(பொன்னாலை)

தெல்லிப்பழை-ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானத்தில் பார்த்திப வருஷப்பிறப்பு விழா எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (க-49)

## புதிய சித்திரத்தேர் நிர்மாணம்

(பொன்னாலை)

சுமார் 60 இலட்சம் ரூபா செலவில் நவாலி முருகமூர்த்தி ஆலயத்திற்குப் புதிய சித்திரத்தேர் நிர்மாணிக்கப்படடு வருகின்றது. (க-49)

# தென்னிலங்கையில் பாரிய அரசியல் மாற்றங்கள்

## சுனந்த தேசப்பிரிய ஆரூடம்

"தென்பகுதியின் அரசியல் நிலை நாளுக்கு நாள் மோசமான நிலையையே அடைந்து வருகிறது. ஜே.வி.பிக்கும் சந்திரிகா அரசுக்கும் இடையிலுள்ள இழுபறி நிலை முடிவில்லாமல் தொடர்ந்து கொண்டே போகிறது. ஐக்கிய தேசியக் கட்சியிடம் கூட இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சிறந்த் திட்டம் எதுவும் கிடையாது. இதனால் இலங்கை வாழ் மக்கள் எதிர்காலத்தில் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய நிலையே ஏற்படும்"

கடந்த முதலாம் திகதி கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்ட மாற்றுக கொள்கைகளுக்கான நிலையத்தைச சேர்ந்த சுனந்த தேசப்பிரிய பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடபகுதி ஊடகவியலாளர்கள் தெனபகுதியிலும் தென்பகுதி ஊடகவியலாளர்கள் யாழ்ப்பாணத்திலும் தங்கி நின்று செய்திகளைத் திரட்டி தத்தமது பத்திரிகைகளுக்கு அனுப்ப 'பனாஸ்' அமைப்பு ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையிலேயே இம் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பனாஸ அமைப்பின் ஏற்பாட்டின் அடிப்படையில் வடபகுதி ஊடகவியலாளர்கள் தென்பகுதியில் தங்கி நின்று அங்கு ஏற்பாடு செய்யப்படும் மாநாடுகள், அரசியல் தலைவர்களுடனான சந்திப்புகள் ஆகியன குறித்து செய்திகளைத் திரட்டி வருகின்றனர்.

இநத வகையில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டில் கலந்து கொண்ட ஊடகவியலாளர் மத்தியில் தென்பகுதி அரசியல் நிலை பற்றிப் பேசுகையிலேயே சுனந்த தேசப்பிரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிலையில் அரசாங்கம் உடனடியாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்த முன்வரவேண்டும். பொதுக் கட்டமைப்பு விடயத்தில் சுதந்திரக் கட்சி சரியான போக்கைக் கொண்டிருந்த போதிலும் அதன் கூட்டுக் கட்சியான ஜே.வி.பி. அதற்கெதிரான போக்கையே கடைப்பிடிக்கிறது எனத் தெரிவித்த அவர் தொடர்ந்து பேசுகையில்,

"இந்த நாட்டை அழிவுப் பாதையிலிருந்து மீட்க ஜே.வி.பி. மற்றும் சிங்கள அடிப்படை இனவாதிகளால் ஒரு போதும் முடியாது. எனவே அவர்கள் தங்களால் உருப்படியாக எதையாவது செய்ய முற்படுபவர்களுக்கு முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது. இந்த நிலையில் அரசாங்கம் தற்துணிவுடன் கூட்டமைப்பை நிறுவ முறபட்டால் சுதந்திரக்கட்சி-ஜே.வி.பி.கூட்டணி உடையும். இதனால் நாட்டில் மீண்டுமோர் தேர்தல் ஏற்பட ஏதுவுண்டு. தற்போதைய நிலவரத்தின்படி ஏப்ரல் மாதத்தின் பின் தென்னிலங்கை அரசியலில் பாரிய மாற்றம் ஏற்படும்.

சுனாமிப் பிரச்சினை 100 மீற்றர் விடயம் உட்பட அனேக பிரச்சினைகள் அரசுக்கு உண்டு. இனப்பிரச்சினை தொடர்பாக ஏற்பட்டுவரும் சர்வதேச அழுத்தம் அரசாங்கத்தை நெருக்கடி நிலைக்குத் தள்ளியுள்ளது. எனினும் யுத்தமொன்று ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாகவே காணப்படுகிறது. இவை எல்லாவற்றையும் விடக் கிழக்கு மாகாண நிலைமை நாளுக்கு நாள் மோசமாகவே போய்க் கொண்டிருக்கிறது. கிழக்கில் தற்பொழுது நிழல் யுத்தமொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் கிழக்கில் குறைந்த பட்ச யுத்தமொன்றில் அரசாங்கமும் புலிகளும் ஈடுபட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றார்.

**வே.தவச்செல்வம்**

இம் மாநாட்டில் மாற்றுக் கொள்கை நிலையத்தின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் உட்படப்பலரும் உரையாற்றினார்கள். □









## அரச அதிகாரிகள் மக்களின் நலன் கருதிச் செயற்படவேண்டும்

**வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ**

(சாவகச்சேரி)

அலுவலகக் கட்டடங்களை வசதியாக அமைப்பதில் ஆர்வம் காட்டும் அரச அதிகாரிகள் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் உள்ள மக்களுக்கு வேண்டிய உதவித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதில்லை.

இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ.

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கான் செயற்திறன் போட்டிக்கான பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரச அதிகாரிகள் தமது அலுவலகங்களைப் புனரமைத்து சகல வசதியுடன் வைத்திருப்பதிலும் வாகன வசதிகளை பெறுவதிலுமே அதிக ஆர்வம் காட்டுகின்றார்கள்.

இதனையடுத்து கிராமப் புறங்களில் உள்ள சேதமடைந்த வீதிகளைத் திருத்தவும் மற்றும் சுகாதாரம், குடிநீர் வசதிகளைப் பெற்றுக் கொடுக்கவும் சகல உள்ளூரர்ட்சி மன்றங்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் விரைவில் தேர்தல் மூலம் மக்களால் தெரிவு செய்யப்படும் சபையும் உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பும் ஏற்

## இராசி பலன்

07.04.2005

(பங்குனி 25, வியாழக்கிழமை)

சதுர்த்தசி பின்னிரவு 3.48 மணிவரை

புரட்டாதி நண்பகல் 12.12 மணிவரை

இராகுகாலம 1.37 - 3.07 மணிவரை.

சுபநேரம் 7.37 - 9.07 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | பிரயாணம், காரியதாமதம், சோம்பல் நிலை, வேலைச்சுமை |
| இடபம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, காரிய அனுகூலம், கீர்த்தி. |
| மிதுனம் | பிரயுத்தனம், நன்கொடை, எடுத்தகாரியம் கைகூடும், போசனசுகம். |

| | |
|---|---|
| மேடம் | பிரயாணம், காரியதாமதம், சோம்பல் நிலை, வேலைச்சுமை |
| இடபம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, காரிய அனுகூலம், கீர்த்தி. |
| மிதுனம் | பிரபுத்தனம், நன்கொடை, எடுத்தகாரியம் கைகூடும், போசனசுகம். |
| கடகம் | கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு, சரீரப் பிரயாசை, காரிய தாமதம். |
| சிங்கம் | அமைதிக்குறைவு, சரீரப்பீடை, காரிய தாமதம், பணவிரயம். |
| கன்னி | மனோதைரியம், எடுத்தகாரியம் கைகூடும், நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம் |
| துலாம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், சுவாரஸ்யம், போசனநன்மை, சுபநிகழ்வு. |
| விருச்சிகம் | புத்திரரால் கவலை, காரிய தாமதம், அஜீரணரோகம், தாழ்ந்த சுபாவம். |
| தனுசு | தாய்வழி உறவு, ரோகநிலை, அமைதிக் குறைவு, முயற்சி தாமதம். |
| மகரம் | மனோ தைரியம், புதிய முயற்சி, சகோதரர் உதவி, செல்வாக்கு. |
| கும்பம் | அமைதிக்குறைவு, அதிகசெலவு, முயற்சி தாமதம், ரோகநிலை. |
| மீனம் | சிந்தனைமிகுதி, வெகுமானம், சயனசுகம், நல்லமுயற்சி. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

**—வளவன்**

அரச அதிகாரிகள் தமது அலுவலகங்களைப் புனரமைத்து சகல வசதியுடன் வைத்திருப்பதிலும் வாகன வசதிகளை பெறுவதிலுமே அதிக ஆர்வம் காட்டுகின்றார்கள்.

இதனையடுத்து கிராமப் புறங்களில் உள்ள சேதமடைந்த வீதிகளைத் திருத்தவும் மற்றும் சுகாதாரம், குடிநீர் வசதிகளைப் பெற்றுக் கொடுக்கவும் சகல உள்ளூராட்சி மன்றங்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் விரைவில் தேர்தல் மூலம் மக்களால் தெரிவு செய்யப்படும் சபையும் உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பும் ஏற்படுத்தப்படும் என்றார். (க-47)

## நிவாரணங்களை உடன் வழங்கக்கோரி காலியில் பாதிக்கப்பட்டோர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுககு உடனடியாக நிவாரணம் வழங்கப்பட வேண்டுமெனக் கோரி பாதிக்கப்பட்ட மக்கள் நேற்றுமுன்தினம் காலியில் ஆர்ப்பாட்டமென்றை நடாத்தியுள்ளனர்.

சுனாமியினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோரின் ஏற்பாட்டில் இவ் ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டுள்ளது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் தமக்கு நிவாரணமாக வழங்கப்படும் கொடுப்பனவுத் தொகையை அதிகரிக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபயவர்த்தன அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் அரசாங்கம் நிறைவேற்றியதாகத் தெரியவில்லை.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் நலன்புரி நிலையங்கள் மற்றும் கூடாரங்களில் தங்கியுள்ளவர்களுக்கு உரிய குடியிருப்பு வசதிகள் உட்பட அனைத்தையும் ஏற்படுத்திக் கொடுக்காவிட்டால் அது அரசாங்கமாக இருக்க முடியாது.

இதனாலேயே காலி மாவட்டத்தை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்குமாறு நாம் ஆரம்பம் முதல் கோரி வந்தோம. எமக்கு அமைச்சுப் பதவிகள் வேண்டாம். வேறு எந்தப் பதவிகளும் வேண்டாம். ஆனால், அதிகாரத்தை மாத்திரம் தாருங்கள். ஒரு மாதத்துக்குள் காலி மாவட்டத்தல் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு உரிய வசதிகள், ஒழுங்குகள் செய்து கொடுப்போம் என்றும் குறிப்பிட்டார்.





அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து நேற்றைய தினம் நல்லூரில் நடைபெற்ற பேரணியில் கலந்து கொண்டோரையும், பேரணியின் இறுதியில் கண்காணிப்புக் குழு அதிகாரியிடம் மகஜர் கையளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல் - குறள்

வலம்புரி

# சமயத்தை களங்கப்படுத்தும் போலிச் (ஆ) சாமிகள்

மனித இனத்தின் தோற்றத்தோடு உருப் பெற்றதே இந்து சமய்ம். அறுவகைச் சமயங்களை தன்னுள் அடக்கி ஆலவிருட்சமாக விளங்கும் இந்து சமயத் தத்துவங்கள், கோட்பாடுகள் உயர்வானவை.

இந்து சமயத்தின் தத்துவங்கள் மனித வாழ்வியலுக்கு உரியவை என்பதை பிற சமயத்தவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். அதே நேரம் இந்து தத்துவ, கோட்பாடுகள் மருத்துவ நலனை, உளவியலை, அன்பை அடித்தளமாக கொண்டவை என்பதை விஞ்ஞானிகள் தமது ஆய்வின் ஊடாக கண்டறிந்துள்ளனர்.

இந்து சமயத்தின் ஓர் அங்கமாக விளங்கும் சைவ சமயம் மனித வாழ்வியலின் உன்னதத்தை வலியுறுத்துகிறது. உலகில் இருக்கக் கூடிய சமயங்களுக்கு எதிர்ப்பதம் கிடையாது. அவ்விதம் எதிர்ப்பதம் கிடையாமைக்குக் காரணம் குறித்த சமயப் பெயர்களுக்கு அர்த்தமில்லாமையாகும்.

ஆனால் சைவம் அவ்வாறன்று. சைவத்திற்கு எதிர்ப்பதம் அசைவம் ஆகும். அசைவம் என்பது மாமிசம் சார்ந்தது. எனவே அசைவம் என்பதற்குள் கொலை, புலால் உண்ணல், இரக்கமின்மை, ஜீவகாருண்யம் இன்மை போன்ற விடயங்கள் உள்ளடங்கும்.

இதன் எதிர்ப்பதமே "சைவம்" என்பதாகும். ஆகவே சைவம் என்பது கொல்லாமை, புலால் உண்ணாமை, பொய்யுரையாமை, அன்புடமை என்பதை உள்ளடக்கும். ஆக தனது பெயரிலேயே அர்த்தபுஷ்டியான கருத்தைக் கொண்டுள்ள சமயமாக சைவம் இனங்காணப்படும்.

நாயன்மார்களும், மன்னர்களும், மறை ஞானிகளும் கட்டிக்காத்த சைவம் இப்போது போலிகளின் பொய் வேடத்தாலும், பொறுப்பற்ற அரசியல் தலைமைகளாலும் சீரழியும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஆம், பிரேமானந்தா என்ற போலிச் சாமியின் திருவிளையாடல்கள் நீதிமன்றம் வரை சென்றதன் விளைவு சிறைத்தண்டனை ஆகிவிட்டது. தவ வேடம் தரித்த அந்தப் போலி மனிதர் நடத்திய கொலை, கற்பழிப்பு அம்பலமானதால் "சாமி" என்ற தோற்றமே வெறுப்புக்குரியதாயிற்று.

புறப்பற்றறுத்து பரம்பொருள் மீது பற்றுக் கொண்டு உலக நன்மைக்காக தம்மை அர்ப்பணித்த யோகிகள் வாழ்ந்த பூமியில் இப்படியும் போலிகள் இருப்பது சமயத்திற்கு இழுக்காகும்.

இத்தகைய போலிகளை இனங்காண்பது மக்களின் தலையாய கடமையாகும். அதே நேரம் தமது அரசியல் இலாபத்திற்காக தாம் செய்த அரசியல் சுரண்டல்களை மறைப்பதற்காக இந்து சமயத்தின் தலைமைப் பீடமாகிய காஞ்சி காமகோடி பீடாதிபதிகளை சிறைகளில் அடைக்கும் சின்னத்தன[illegible] அரசியல் தலைமைகள் பற்றியும் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். தனி மனித தவறுகளுக்காக பழம்பெரும் சமயத்தை சந்தைக்கு இழுக்கும் சினிமா ஆட்டங்களை அரசியலிலிருந்து விலக்குவதும் மக்களின் மகத்தான பணி. இதனைச் செய்கின்றபோதே சைவ நீதி உலகமெல்லாம் விளங்கும்.

# அரசாங்கத்தின் 100 மீற்றர் திட்டம் நடைமுறைக்குச் சாத்தியமற்றது

## சர்வதேச நிறுவனப் பிரதிநிதிகளிடம் எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள கடற்கரையிலிருந்து 100 மீற்றர் திட்டமானது நடைமுறைக்குச் சாத்தியமற்றது என எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.**

பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று முன்தினம் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் உலகவங்கி, ஜெய்க்கா நிறுவனம் மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் இலங்கைப் பிரதிநிதிகளை எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் சந்தித்தனர்.

இதன்போது அரசாங்கத்தின் 100 மீற்றர் திட்டம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் தமது ஆட்சேபத்தை வெளிப்படுத்தின.

திருகோணமலையில் இந்தத்திட்டம் சாத்தியமற்றது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ்பிரேமச்சந்திரன் இதன்போது சுட்டிக்காட்டினார்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் பிரதேசங்களில் அரசாங்கத்தின் திட்டமானது நடைமுறைப்படுத்தப்பட முடியாது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

எதிர்வரும் மே மாதத்தில் இலங்கைக்கு உதவி வழங்கும நாடுகளின் கூட்டம் நடைபெறவுள்ளதால் கட்சித் தலைவர்கள் அதற்கு முன்னர் கூடி ஆராய வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை மீள் நிர்மாணப் பணிகளுக்காகப் பொதுக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர்களால் வலியுறுத்தப்பட்டது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றது. இந்த நிலையில் அந்தக் கட்சியை பொதுக் கட்டமைப்புக்கு இணங்கச் செய்வதன் முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டது.

இது நடைமுறைப்படுத்தப்படாவிடின் சுனாமி ஆழிப் பேரலையின் பின்னர் நாட்டில் புனரமைப்பு என்பது நடைமுறைக்குச் சாத்தியமற்றதாகிவிடும் எனவும் எதிர்க்கட்சிகள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளன.

(ர-4)

# இலங்கை அரசின் செயற்பாடுகளுக்கு எதிராக விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## -ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு

(கொழும்பு)

வட-கிழக்கு மாகாணத்தில் அரச படைகள் பொது மக்களின் வீடுகளை வகைதொகையின்றிக் கடந்த காலங்களில் குண்டு வீசி அழித்தமை மற்றும் சொந்த வீடுகளில் இருந்து பலாத்காரமாக ம[illegible]களை அப்புறப்படுத்தியமை மற்றும் தனியார் வீடுகளை ஆக்கிரமித்து வைத்திருக்கின்றமை என்பன தொடர்பில் உரியநடவடிக்கை எடுப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சாசனத்திற்கும் சர்வதேச மனித உரிமை நியமங்களுக்கும் முரணானது என்பதைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்ட ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வீட்டு உரிமைகளுக்குப் பொறுப்பான சிறப்புப் பிரதிநிதி மிலூன் கோத்தாரி தனனைச் சந்தித்த வடக்கு-கிழக்கு மனித உரிமைச் செயலகத் தூதுக்குழுவிடம் உறுதியளித்துள்ளார்.

வட-கிழக்கு மனித உரிமைச் செயலகத்தின் பிரதித் தலைவர் கா.சிவபாலன், செயலகத்தின் உறுப்பினர் த.மகாசிவம் ஆகியோர் மிலூன் கோத்தாரியை ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அக் கலந்துரையாடல் பற்றி மேலும் தெரியவருவதாவது, வட-கிழக்கில் 20 வருடங்களாக நடந்த போரினால் படையினர் இலட்சக் கணக்கான வீடுகளை குண்டு வீசியும், எறிகணை வீச்சின் மூலமும், புல்டோசர் முலமும் அழித்தும், மிக மோசமாகச் சேதமாக்கியும் உள்ளனர்.

அத்துடன் வீடுகளிலிருந்து கதவுகள், யன்னல்கள், மரத் தளபாடங்களை உடைத்து எடுத்து விறகாக உபயோகித்துள்ளதுடன், அஸ்பெஸ்ரஸ் தகடுளை அகற்றி தமது பாதுகாப்பரண்கள், சோதனைச் சாவடிகள் அமைக்கவும் உபயோகித்துள்ளனர்.

இத்தோடு, இன்றும் பல்லாயிரக்கணக்கான வீடுகளை ஆக்கிரமித்துத் தம்வசம் வைத்துள்ளனர்.

இவ்வீடுகள் ஸ்ரீலங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தப்படி, ஒப்பந்தம் கைச்சாத்திட்ட நாளில் இருந்து 6 மாத காலத்தினுள் வீட்டு உரிமையாளர்களிடம் மீளவும் கையளிக்கப்பட்டிருக்க வேணடும்.

ஆனால் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று வருடத்திற்கு மேலாகியும், இவ் ஒப்பந்தத்தை மீறி பல்லாயிரக் கணககான வீடுகளை மீளவும் கையளிக்காது தம்வசம் வைத்துளளனர். இலங்கை அரசின் இச்செயலானது சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம், சிவில் அரசியல் உரிமைகள் பற்றிய அனைத்துலக சாசனம், பொருளாதார சமூக பண் பாட்டு உரிமைகள் பற்றிய அனைத்துலக சாசனம், எல்லாவித மான இன ஒதுக்கலுக்கான சமவாயம், சிறுவர் உரிமைகள் சாசனம், ஐ.நா ஆவணங்களில் வீட்டுரிமை, சொத்துக்கள் உரிமை, சொத்துக்களை எதேச்சதிகாரமாகப் பறிக்காமல் இருப்பதற கான உரிமை, தொழில் செய்வதற்கான உரிமை, வீடு, உணவு, உடை, மருத்துவ வசதிகள், சமூக சேவைகளுக்கான உரிமை, தனிப்பட்ட சுயவிருப்பு, குடும்பம் வீட்டுக்கான உரிமை, குடும்பச் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கான உரிமை மற்றும் பலாத்காரமாக வீட்டைவிட்டு அகற்றுவதற்கு எதிரான ஐ.நா. தீர் மானம், போதிய வீட்டு வசதிகள் பற்றிய பொதுக் குறிப்புரை, உப குழுவின் பலாத்கார வெளியகற்றுவதிலிருந்தும், பாதுகாப்பது பற்றிய தீர்மானம் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந் தோர் பற்றிய ஐ.நாவின் கொள்கைப் பிரகடனங்கள் தீர்மா னங்கள் ஆகியவற்றிற்கு எதிரானவையென தூதுக்குழுவினர் எடுத்துக்கூறினர்.

(ர)

## 10 ஆம் திகதி வரை

# சகல கத்தோலிக்கர்களும் துக்கதினம் அனுஷ்டிக்கவும்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள சகல கத்தோலிக்கர்களும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரையும் துக்கதினம் அனுஷ்டிக்குமாறு பேராயர் கலாநிதி வண ஒஸ்வோல்ட் கோமஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், நித்திய இளைப்பாற்றியை அடைந்துள்ள பரிசுத்த பாப்பரசர் 2ஆவது அருளப்பர் சின்னப்பர் இலங்கைமீது மிகுந்த அன்பு கொண்டிருந்த ஒருவர்.

இலங்கையில் சமாதானம் ஏற்படவேண்டுமென பாப்பரசர் தொடர்ந்து பிரார்த்தனை செய்து வந்தவர்.

1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை வந்த போது இலங்கையில் சமாதானம் நிச்சயம் ஏற்படும் என நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

அதுமட்டுமன்றி அண்மையில் சுனாமிப்பேரலை ஏற்பட்ட போது பாதிப்புற்ற இலங்கை மக்களுக்கு உதவுமாறு சர்வதேச சமூகத்திடம் பாப்பரசர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

எனவே கௌரவத்துக்கு உரிய திருத்தந்தை ஒருவர் பிரிந்து சென்றுள்ளமை தம்மை ஆழ்ந்த சோகத்துக்கு உள்ளாக்கியுள்ளது என்றுள்ளது.

(க)

## சங்காபிஷேகம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கிழக்கு மாவுதிடல் அருள்மிகு காத்தராயன் ஆலய முதலாவது கும்பாபிஷேக அஸ்டோத்தர (108) சங்காபிஷேகம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

(க-126)


## சாயி அருளமுதம்



**மானுட வர்க்கத்தைக் காப்பாற்றும் ஒரே நோக்குடனேயே அவதார புருஷர் தோன்றியுள்ளார். ஆகவே யாத்திரகன், பாதை, அடையுமிடம் ஆகியவை பற்றி அவர் நன்கு அறிந்துள்ளார். அவரே சிருட்டி கர்த்தா. தமது சகதியை அவர் நன்கு உணர்ந்துள்ளார். யாவரினதும் இறநதகாலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகிய வற்றை அவர் அறிவார். அவர் வழியைக் காண்பித்து விடுதலை பெற்றுக் கொடுக்கிறார்.**

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

# தீவுச்சேனையில் கருணா...

ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலை யில் நேற்று சாட்சியமளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திக திக்கும் மார்ச் மாதம் இரண்டாம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப்புலி கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களின் பின்னணி குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி நாள் விசாரணை நேற்று மட்டக்களப்பு நீதிமன்றக் கட்டடத்தொகுதியில் நடைபெற்றது.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஜே. விஸ்வநாதன் தலைமையிலான இந்த ஆணைக்குழு முன்னிலையில் அவர் அளித்த சாட்சியத்தில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவம் மற்றும் விடுதலைப்புலிகள் தவிர ஏனைய ஆயுதக்குழு நடமாட்டத்தைப் பொறுத்த வரை எனக்குத் தெரிந்தவரை கருணா குழு வின் நடமாட்டம் உள்ளது. அதுவும் இரா ணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில்தான் உள் ளது.

வெலிக்கந்தை பிரதேசத்திலுள்ள தீவுச் சேனையில் கருணா குழுவின் முகாம் உள் ளதாக அறிகின்றேன்.

இக்குழுவிற்கு இராணுவ உதவி இருப் பது குறித்து எனக்குத் தெரியாது. இதற் கான ஆதாரங்களும் இல்லை.

கருணாகுழுவின் முகாம் இருப்பது போர் நிறுத்த உடன்படிக்கை மீறலாகும். துணைப் படை என்பதற்கான சரியான அர்த்தம் எனக்கும் தெரியாது.

ஆனால் கருணாவின் ஆதரவாளர்கள் ஆயுதங்களுடன் இருக்கின்றார்கள். போர் நிறுத்த உடன்படிக்கையின்படி துணைப் படைகளின் ஆயுதங்களை களைய வேண் டியது அரசின் கடமை. கருணா குழுவின ரின் ஆயுதக்களைவு குறித்து எனது தலை மையகத்திற்கு மார்ச் மாதம் 21 ஆம் திகதி அறிவித்துள்ளேன்.

அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார் கள் என்பது குறித்து எனக்குத் தெரியாது.

விடுதலைப்புலிகள் மீது இப்படியான தாக்குதல் தொடர்வது போர்நிறுத்த உடன் படிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்துமா? இல் லையா? என்பது குறித்து என்னால் கருத் துக்கூறமுடியாது.

எதிர்காலத்தில் இப்படியான தாக்குதல் களை தவிர்ப்பது என்றால் எனது அபிப்பிரா யப்படி அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலி களுக்குமிடையிலான தொடர்புகள், உரை யாடல்கள் மிக நெருக்கமானதாக இருக்க வேண்டும் என்றார்.

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரான லெப்.கேணல் கௌசல் யன் படுகொலை சம்பவம் தொடர்பாக ஆணைக்குழுவினால் கேட்கப்பட்ட கேள் விக்கு அவர் பதிலளிக்கையில் பின்வரு மாறு கூறினார். அவர் கூறியதாவது, சம்பவ தினமிரவு 10.00 மணியளவில் இது குறித்த தகவல் கிடைத்தது. உடனே புறப்பட்டு பொலனறுவை வைத்தியசாலையை சென்ற டைய அதிகாலை 2.00 மணியாகிவிட்டது.

அங்கு ஐந்து சடலங்களை கண்டேன். மீண்டும் மறுநாள் காலை 10.00 மணிக்குச் சென்று சடலங்களை எடுத்து வருவதற்கு எங்களால் வழித்துணை வழங்கப்பட்டது. இதுகுறித்து பொலிஸ் விசாரணை அறிக்கை எதிர்பார்க்கப்படுகின்றது. அதுவரை இச்சம் பவமானது போர்நிறுத்த உடன்படிக்கை மீறலா? இல்லையா? என்பது குறித்து கூற முடியாது.

விடுதலைப் புலிகளின் பயணத்திற்கு பாதுகாப்பு வழங்குவது பொலிஸாரும் இரா ணுவத்தினருமதான். நாம் வழங்குவது வழித்துணையையாகும். நான் அறிந்தவரை குறிப்பிட்ட பயணத்திற்கு விடுதலைப்புலி கள் பொலிஸ் மற்றும் இராணுவ பாதுகாப்பு கோரி விண்ணப்பிக்கவில்லை.

இத்தாக்குதல் சம்பவத்திற்கு யார் பொறுப்பு என்று இதுவரை கண்டறியப்படாத காரணத்தினால் இச்சம்பவமானது போர் நிறுத்த உடன்படிக்கையை பாதிக்குமா? இல்லையா? என்பது குறித்து எத்தகைய கருத்துக்களையும் இப்போது கூறமுடியாது என்றார் அவர்.

நான்கு நாட்கள் நடைபெற்ற மேற்படி விசாரணைகளில் 15 பொலிஸ் அதிகாரி கள், 5 இராணுவ அதிகாரிகள், 5 விசேட அதிரடிப்படையினர் உட்பட மொத்தம் 26 பேர் வாக்குமூலமளித்துள்ளனர். (த)

## பாப்பரசரின்...

விடிவுக்காக அவர் அரும்பணியாற்றினார். அன்பு, காருண்ணியம், சகோதரத்துவப் பண்பு போன்ற சீலங்களை அவர் பரப்புரை செய்தார்.

சுதந்திரம், விடுதலை, சமத்துவம் போன்ற உயரிய மனித விழுமியங்களில் நம்பிக்கை கொண்ட அனைத்து மனிதப் பிறவிகளும் பாப்பரசரின் உன்னதமான வாழ்க்கையை யும், அவரது உயரிய சிந்தனைகளையும் என்றும் தமது நெஞ்சில் நிறுத்தி அவரை கௌரவிப்பார்கள்.

தமிழ் மக்களின் சார்பாக எமது ஆழ்ந்த துயரையும் கவலையையும் தெரிவிக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

(ச-4)

## பொலிஸ்...

அதிகாலை 4 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றிருப்பதாக கிழக்குப் பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்தார்.

கல்முனைக்குடி நகர மண்டப கட்டடத் திற்கு முன்னால் பொலிஸார் இருவர் பாது காப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். நேற்று அதிகாலைவேளை அங்கு துப்பாக்கி வேட்டு தீர்க்கப்பட்டுள்ளது. இதில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பலியாகியுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டினை மேற்கொண் டோர் பொலிஸாரிடம் இருந்து ரி.56 ரக துப்பாக்கிகளை அபகரித்துச் சென்றுள்ள னர். இவ்வாறு பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

(ச-9)

## கிழக்கு...

"சமாதானத்திற்கு குந்தகம் விளைவிக் காதே", இடைக்கால நிர்வாகத்தை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளி", "வருங் காலம் எமதாகும் தமிழீழம் உருவாகும்", 'இயல்பு நிலையில்லை இடைக்கால தீர் வில்லை எதிர்பார்த்த எதுவும் கிடைக்க வில்லை" போன்ற வாசகங்கள் பொறிக் கப்பட்ட பதாகைகளை தாங்கியிருந்தனர்.

(ச-19)

# முத்தமிழ்விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முத் தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ்விழா இன்றும், நாளையும் கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இன்று முற்பகல் 9 மணிக்கு மன்றத் துணைத் தலைவர் கு.உதயகுமார் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலை வர் கலாநிதி சி.சிவலிங்கராசா கலந்து கொள்ளவுள்ளார்.

நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும் நிகழ்விற்கு சி.இராஜேஸ்வரன் தலைமை தாங்குகிறார்.

பிரதம விருந்தினராக வாழ்நாள் பேராசி ரியர் வைத்திய கலாநிதி செ.சிவஞான சுந்தரம் (நந்தி), சிறப்பு விருந்தினராக கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரையும் கலந்து கொள்ளவுள்ளனர். (க)

# தேர் உற்சவம்

(துன்னாலை)

துன்னாலை வடக்கு ஆயில்நின்றொல்லை விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 30 ஆம் திகதி ஆரம்பமாகி நடை பெற்றுவருகிறது.

இன்று தேர் உற்சவமும், நாளை தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன.

(க-7,101)

## அரசியல்...

அரசுடன் இணைந்து பொதுக்கட்டமைப் பினை உருவாக்குவது தொடர்பாக வெளி நாட்டுப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசினர்.

இதேவேளை இந்தக் குழுவினருடன் சென்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்கனவே நாடு திரும்பியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-4)

# சேவைநலன் பாராட்டு

யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி ஆசிரியை

## திருமதி சுகிர்தராணி ஜெயரத்தினம்

(B.A. Dip.in.Ed)



### முதல் நியமனம் தொடக்கம் சேவை விபரம்

| பாடசாலையின் பெயர் | தொடக்கம் | வரை |
|---|---|---|
| 1. திருகோணமலை மேற்குத் தமிழ் மகாவித்தியாலயம் | 1976 | 1978 |
| 2. தி/மெதடிஸ்த பெண்கள் ஆங்கிலப் பாடசாலை | 1978 | 1978 |
| 3. தி/ஸ்ரீ சண்முக வித்தியாலயம் | 1978 | 1985 |
| 4. யா/மல்லாகம் மகாவித்தியாலயம் | 1985 | 1994 |
| 5. யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி | 1994 | 2005 |

திருமதி சுகிர்தராணி ஜெயரத்தினம் அவர்கள் ஆரம்பக் கல்வியை கோப் பாய் நாவலர் வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வி தொடக்கம் உயர் தர வகுப்புவரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் கல்வி பயின்று, தேர்ச்சிபெற்று பட்டப்படிப்பினை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் படித்து பொதுக்கலைமாணிப் பட்டத்தினைப் பெற்றார்.

சமூகக்கல்விப் பாடத்தை மாணவர்களுக்கு அறிவுபூர்வமாகவும், ஆர்வத் துடனும் கற்பித்து வந்ததுடன் போட்டிகள், கண்காட்சிகள் போன்றவற்றி லும் ஆர்வத்துடன் செயற்பட்டு பலதடவைகளில் வெற்றியும் பெற்றுள்ளார். ஆசிரியர் சேவையில் 29 வருடகாலம் உற்சாகத்துடன் பணியாற்றி அனுபவ முதிர்ச்சியும், ஆளுமையும் கொண்டவராக விளங்கி அரச சட்டத்தின் பிர காரம் 14.02.2005 இல் தனது 60 வயது பூர்த்தியுடன் சேவையிலிருந்து ஓய்வுபெறுகிறார்.

ஓய்வுபெற்ற ஆசிரியை பாராட்டும்முகமாக உரும்பிராய் இந்துக் கல்லூரி சமூகத்தினர் ஒன்றிணைந்து 07.04.2005 இன்று பாராட்டுவிழாவை நடத்து கின்றனர். அவரின் ஓய்வுகாலம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்.

யாழ். நகரில் O/L DAY CLASS ற்கு

நிகரில்லாத் தனித்துவமான ஆசிரியர் குழுவைக்கொண்ட ஒரே நிறுவனம்

வின்னா கல்வி நிறுவனம்

O/L DAY CLASS பிரிவு 2

ஆரம்பத் திகதி 11.04.05 (8.30, 2.00)

- பிரிவு 2 இற்கு சொற்ப மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.
- கணித, விஞ்ஞான விசேட வகுப்புக்கள் நடைபெறும்.
- சென்ற ஆண்டுபோல் இம்முறையும் பிரிவு 6 மட்டுமே
- தூர இடத்து மாணவர்களிற்கு விடுதி வசதி செய்துதரப்படும்.

குளிரூட்டப்பட்ட நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

நாவடி மைந்தன் ஜெய் ஆகாஷ், பிரணதி, நாசர், தாமு, வையாபுரி நடித்த




கா.நேரம்: 10.30, 02.30, 06.30, 09.30 (பு.நே)

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜய், ரவிகிருஷ்ணா, நதீஷா நடித்த



கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்

பார்த்தீபன், காவேரி, மாஸ்ரர் அஸ்வின் நடித்த

கண்ணாடிப் பூக்கள்

காநேரம்: 10.30, 2.30,

06.04.2005 முதல், இரவு 6.30, 9.30 இற்கு / தனுஷ், ஸ்ரீதேவி நடித்த

தேவதையை கண்டேன்

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.